


# நடேஸ்வரம்

காரைநகர் களபூமி விளானையைச் சேர்ந்த

## அமரர் குமாரசாமி நடேசன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த நினைவு மலர்

12.05.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நடேஸ்வரம்



காரைநகர் களபூமி விளானையைச் சேர்ந்த

## அமரர் குமாரசாமி நடேசன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த நினைவு மலர்

12.05.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம் சச்சிதானந்த பரப்பிரம்ம

புருஷோத்தம பரமாத்மா

ஸ்ரீ பகவதி சமேத

ஸ்ரீ பகவதே நமஹ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அமைதித்துயில் கொண்ட எம்
அன்புத் தெய்வத்தின் மலர்ப் பொன்னடியில்
எங்கள் இல்லத்தில்
என்றும் தவழ்ந்து – இதமீந்த வசந்தம்!
குமுறும் சூறாவளியாம்
எம் நெஞ்சங் குமுற வைத்து
குலைந்து கலைந்து கனவாகி ஐயகோ!
அணைத்துக் கதை சொன்ன அன்புள்ளம்!
நினைப்பை மறந்து துயின்றது!
நெஞ்சில் வெறுமை பயின்றது!
அருளமுதே ஆருயிரே
அடிபுரண்டு அழுதலறி நலிந்து உங்கள்
பெருகு புகழ்த் திருவடியில் பேசுந்தமிழால்
பெற்றமிகு கவிமாலை புனைந்து சாத்தி!
கண்ணீரால் அர்ப்பணித்தோம் கவலை நீங்க
கடவுள் அடி இணையிருந்து
அருள் பெய்வீரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்ணில்
20.08.1952

விண்ணில்
12.04.2015

அமரர்

# குமாரசாமி நடேசன்

விளானை களபூமி காரைநகர்

## திதி வெண்பா

ஆண்டு விஜய வருடம் பங்குனித் திங்கள்
தூண்டு அபர பட்ச அட்டமி திதி விளங்க
எந்தை நாயகன் நடேசன்
திக்கரையான் தாள் சேர்ந்த திதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப்பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடி கண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில் வலி வலமுறை யிறையே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்? கோடைத் திரை லோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச்சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆதிஆய் நடுவும் ஆகிஅளவு இலா அளவும் ஆகிச்
சோதிஆய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம்ஆகிப் பெண்ணும் ஆய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் - குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் - தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் - குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப்- பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் குமாரசாமி நடேசன் அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்து எனப் போற்றப்படுவதும் நீர்வளமும், நில வளமும், மலைவளமும் மிக்குப் பொலிந்து திகழும் ஈழமணித் திருநாட்டின் சிரமெனத் திகழும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்குத் திசையில் இரு பத்தியிரண்டு கிலோ மீற்றர் தொலைவில் தொன்மைச் சிறப்புகளுடன் விளங்குவது காரைதீவு என்று அழைக்கப்பட்டு வந்த காரைநகர் ஆகும்.

மேற்கு வடக்கு பக்கங்களில் பாக்கு நீரிணையும், கிழக்குப் பக்கத்தில் குறிப்பிட்ட சிலகாலத்தில் வற்றுதலையுடைய பொன்னாலை பரவைக் கடலும் தெற்கில் அகலம் குறைந்த ஆனால் சிறிது ஆழமான ஊர்காவற்றுறைக் கடலும் காரைநகரைச் சூழ்ந்துள்ளன.

நான்கு பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டுள்ளமையினாலும், மிகப் பழங் காலத்தில் காரைச் செடிகள் மிகுந்து காணப்பட்டமையாலும் இப்பிரதேசத் திற்கு "காரைதீவு" என்ற பெயர் உண்டாயிற்று என்பது ஆன்றோர் தரும் விளக்கமாகும். இத்தீவு 1869 ஆம் ஆண்டு அப்போதிருந்த அரசாங்க அதிபராகிய துவனந்துரையால் வீதி மூலம் யாழ். குடாநாட்டுடன் இணைக்கப்பட்டது. முதல் அனைவரும் 'காரைநகர்' என அழைக்கத் தலைப்பட்டனர். இத் தொடர்பு இப்பிரதேசத்தின் பன்முகப்பட்ட வளர்ச்சிக்குப் பெரிதும் உதவ லாயிற்று.

குடாநாட்டின் பெருநிலப்பரப்புடன் ஏற்பட்ட தொடர்பினால் மக்களின் போக்குவரத்து வசதிகள் அதிகரித்ததன் காரணமாக இப்பிரதேசத்தை யாவரும் அறியக் கூடியதாயிற்று. 1897 ஆம் ஆண்டு காரைநகர் மண், ஈன்ற பெரும் புலவர்களில் ஒருவரான கார்த்திகேயப் புலவர் தாம் யாத்த "திண்ணபுர அந்தாதி" காப்புச் செய்யுளில் "திருவேளையட்டவன் காரைநகருற்றுத் திண் ணபுரம்" எனக் குறிப்பிட்டிருப்பது கவனித்தற்குரியது.

இலங்கையின் ஏனைய சில இடங்களிலும் காரைதீவு என இடங்கள் குறிப்பிடப்படுவதால் 1923 ஆம் ஆண்டு முதல் அரசினரும், தபாற்சேவை சார்ந்த தொல்லைகளைத் தவிர்ப்பதற்கு வசதியாக எங்கள் காரைதீவின் பெயரை "காரைநகர்" என மாற்றி அமைத்ததாக அறிய முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் தொடர்பான பழம்பெருமைமிக்க வரலாறுகள் உள்ளன என் பதை வித்துவான் எவ்.எக்ஸ்.சி. நடராசா எழுதிய "காரைநகர் மான்மியம்" என்ற நூல் மூலம் ஓரளவிற்கு அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ள போதிலும் காரைநகரின் வரலாறு தொடர்பான விரிவான ஆவணப் பதிவு அவசிமாகும்.

ஓர் ஊரின் மங்களகரமான பொலிவிற்கும் அழகிற்கும் திருக்கோ யில்களே காரணமாக அமைகின்றன. "திருக்கோவில் இல்லாத திருவி லூரும்... அவை யெல்லாம் ஊரல்ல அடவி காடே" என்பது அப்பர் திருவாக்கு. எனவேதான் ஊர்கள் தோறும் கோயில்கள் எழுப்பி அறப்பணி செய்ய எமது முன்னோர்கள் தலைப்பட்டனர். இத்தகைய கோயில்களின் ஊடாக சிறந்ததொரு ஆன்மிக வாழ்வும், பண்பாடும் மக்களிடையே சிறப்படையலாயின. ஆன்மீக வாழ்வின் ஊற்றுக்கும், ஓட்டத்திற்கும் இத்தகைய கோயில்களே நிலைக்களனாக மிளிர்ந் தன. இதற்கமைய பன்னெடுங்காலமாக திருக்கோயிற் பண்பாடு காரைநகரில் மேன்மையு றலாயிற்று.

காரைநகரில் சைவப் பண்பாட்டின் எழுச்சிக்கு வித்திட்ட ஆதிக் கோயில் களாக விளங்குபவை, வியாவில் ஐயனார் ஆலயமும், மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்பாள் ஆலயமுமாகும். இந்த வரிசையில் கி.பி. 1796 இல் இலங்கையில் ஆரம்பித்த ஆங்கிலேயர் ஆட்சியில் கிடைத்த சமய வழிபாட்டுச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி, பல்வேறு பிரதேசங்களிலும் ஆலயங்கள் பல அமைக்கப்பட்டன.

கி.பி. 1770 காலப் பகுதியில் அமைக்கப்பட்ட ஆண்டிகேணி ஐயனார் கோயிலும் இன்று "ஈழத்துச் சிதம்பரம்" என்று போற்றப்படும் திண்ணபுரம் சிவன்கோவில் உலகப் புகழ் மிகு கோயிலாக விளங்கி காரைநகருக்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்துள் ளது.

இத்தகையை சிறப்புமிக்க காரைநரில் பெரும் கல்விமான்களும், வேளாண் பெருமக்களும், வர்த்தகப் பெருமக்களும் வாழ்ந்து வருகின்றனர்.

காரைநகரில் பிறந்த வணிகர் பெருமக்கள் இலங்கைத் தீவின் பல பாகங்க ளுக்கும் சென்று தமது வியாபார முயற்சிகளை நடத்தி வந்தனர். இதனால் அவர்கள் வணிகத் தொழில் புரிந்த இடத்தின் பெயர் அவர்களின் பெயருடன் ஒட்டிக்கொண்டது.

ரூவான்வெல நாகமுத்து, பாணந்துறை முருகேசு பதுளை கார்த்திகேசு, பண்டாரவளை துரைராஜா, கண்டிச்சண்முகம், கம்பளை நடராசா. மதவாச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா, வவுனியா காசிப்பிள்ளை என்று, இது போன்று காரைநகரைச் சேர்ந்த வணிகர்கள் பலரும் ஊர்ப் பெயருடன் சேர்த்து அழைக்கப்படுவதைக் காணலாம். இந்த வரிசையில் கம்பளை நகரில் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்து மலையக மக்களிடையே பேரன்பைப் பெற்ற வணிகப் பெருமகன் காரைநகர் களபூமி சத்திரந்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட கம்பளைக் குமாரசாமி ஆவார். இவரது அன்புக்குரிய மனைவியர் இராசம்மாவும், பாக்கியமும் ஆவர்.

குமாரசாமி இராசம்மா தம்பதியனருக்கு பரமேஸ்வரி, சுந்தரமூர்த்தி, தேவ ராணி ஆகிய மூன்று பிள்ளைகளும், குமாரசாமி பாக்கியம் தம்பதியினருக்கு நடேசன், பத்மநாதன், சந்திரா ஆகிய மூன்று பிள்ளைகளும் அவதரித்தனர்.

குமாரசாமி இராசம்மா தம்பதியரின் மூத்த மகள் பரமேஸ்வரி (சரஸ்வதி) காரைநகர் பொன்னாவளையைச் சேர்ந்த இராசா, வள்ளியம்மையின் மகன் டாக்டர் அம்பலவாணரைத் திருமணம் செய்து இனிய இல்லறம் என்னும் நல்லறத்தின் பயனாக தவநாயகி, தவபாலன், சாந்தகுமாரி ஆகிய மூன்று பிள்ளைச் செல்வங்களைப் பெற்றனர்.

சுந்தரமூர்த்தி குமிழங்குழி காரைநகரைச் சேர்ந்த அருளம்பலம் சிவக் கொழுந்து தம்பதிகளின் மூத்த புதல்வியான செந்தில் நாயகியைத் திரு மணம் செய்தார். இவர்களின் இல்லறப் பயனாக அருணகிரிநாதர், தேவ குஞ்சரி, இராசகுமாரி, கமலக்கண்ணன், சாந்தகுமாரி ஆகியோர் பிள்ளைச் செல்வங்களாக அவதரித்தனர்.

தேவராணி விளானை களபூமி காரைநகரைச் சேர்ந்த கந்தையா பொன் னம்மா தம்பதியரின் மூத்த மகன் கனகரட்ணத்தை திருமணம் செய்து இல்லறத்தின் நற்பயனாக சதானந்தன், விஜயா ஆகிய இரண்டு பிள்ளைச் செல்வங்களைப் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தனர்.

அலையும் கலையும் நிறைந்த காரைநகரின் கண்ணே பாலாவோடை அம் பாள் அருளாட்சி புரியும் புறநானூறு கூறும் வீரமறவர்கள் தோன்றி களம் பல கண்ட களபூமி என்னும் தொன்மைச் சிறப்புமிக்க கிராமத்தில் சத்திரந்தை என்னும் குறிச்சியில் சூரியவம்ச மரபில் உயர் சைவ வேளாள தொல்குடித் தோன்றலாம் ஆறுமுகம் சின்னப்பு குமாரசாமி பாக்கியம் தம்பதிகளின் மூத்த புதல்வனாக நடேசன் அவர்கள் ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தி இரண் டாம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இருபதாம் திகதி (1952.08.20) பிறந்தார். இவருக்குப்பின் பத்மநாதன், சந்திராதேவி ஆகிய இரண்டு சகோதரர் பிறந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மநாதன் கோவளத்தை சேர்ந்த இராசரத்தினம் தம்பதியரின் மகள் இராகினியைத் திருமணம் செய்து அஜந்தன், சிந்துஜா, தினேஸ் ஆகியோரைப் பிள்ளைச் செல்வங்களாகப் பெற்று சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

இளைய மகள் சந்திராதேவி இடைப்பிட்டியைச் சேர்ந்த ஆறுமுகம் அருளாம்பிகை தம்பதியரின் மகன் மகேஸ்வரனைத் திருமணம் செய்து இல்லறம் என்னும் நல்லறத்தின் பயனாக கீதாஞ்சலி, கஜன், விநோதினி, கஜானி ஆகிய பிள்ளைக ளைப் பெற்று சிறப்போடு வாழ்ந்து வருகின்றனர்.

நடேசன் தனது ஆரம்பக் கல்வியை காரைநகர் களபூமி ஆலடியில் அமைந்துள்ள அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்றுவந்தார். இடைநிலைக் கல்வியை காரைநகர் இந்துக் கல்லூரியில் ஆரம்பித்து பின்பு கம்பளை சென் அன்ரே கல்லூரியில் கல்வி பயின்றார். க.பொ.த. சாதாரணதரக் கல்வியை நிறைவுசெய்து தனது தந்தையாரின் குமாரசாமி அன்கோ நிறுவனத்தில் தனது வணிக முயற்சிகளை ஆரம்பித்தார்.

24.01.1975 இல் வழுப்போடை, களபூமி, காரைநகரைச் சேர்ந்த இராமுடையார் வம்சத் தோன்றலான கணபதிப்பிள்ளை பொன்னம்மா தம்பதியரின் இரண்டாவது மகள் இராசபூபதியைத் திருமணம் செய்து இல்லற வாழ்வில் புகுந்து தனது மனைவியுடன் இனிதே வாழ்ந்து வந்தார். பரமேஸ்வரி, பொன்னுத்துரை , சிவசுப்பிரமணியம், இரத்தினபூபதி ஆகியோர் இராசபூபதியின் சகோதரர்கள் ஆவார்.

1976 இல் தனது சொந்த ஊரான விளானையில் காணி வாங்கி புதிய வீடு ஒன்றைக் கட்டி அதற்கு 'மருதமஹால்' என்று பெயரும் இட்டார்.

1978 இல் கிளிநொச்சி குளோப் றேடர்ஸ் பாட்டா (Globe Tradere) என்னும் தனது வியாபார நிறுவனத்தை ஆரம்பித்தார். பின்னர் ஏற்பட்ட வன் செயல் காரணமாக பரந்தனில் a.s.சங்கரப்பிள்ளை கட்டடத்தில் இவ்வியாபார நிறுவனம் இயங்கிவந்தது.

1984 இல் மீண்டும் கம்பளைக்குத் திரும்பி தனது தொழில் முயற்சிகளை மீள ஆரம்பித்து சிறப்பாக நடத்தி வந்தார்.

இவர்கம்பளை முத்துமாரி அம்மன் கோவில் பரிபாலனசபை உறுப்பினராக இருந்து ஆலய வளர்ச்சிக்குப் பல்வேறு விதத்திலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்தார். கம்பளை றோட்டறிக் கழக .Rotary club of Gampala Distict 320



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினராக இருந்து கம்பளை மக்களுக்குப் பல்வேறு சமூகசேவைகளையும் திறம்படச் செய்து வந்தார்.

அமரர் நடேசன் தன் மனைவியுடன், கம்பளையில் தனது தந்தையாரிடம் தொழிலை சிறப்புடன் மேற்கொண்டு வருகையில் தனது தொழிலுடன் மட்டும் நிற்காது கம்பளை நகரில் உள்ள சைவ ஆலயத்தில் பெரும் உற்சவங்களை சிறப்புடன் நடத்தி வந்தவர் என்பதுடன் காரைநகரில் உள்ள திக்கரை முருகன் ஆலயம், பாலாவோடை முத்துமாரி அம்மன் ஆலயம், ஈழத்துச் சிதம்பரம் போன்ற தனது ஊர் ஆலயங்களில் பல்வேறு வகையான உற்சவங்களை சிறப் பாக நடத்தி வந்தார்.

அன்னார் பல்வேறு பொது நிறுவனங்கள் ஊடாக சமூகப் பணிகள், சமயப் பணிகள் என்பவற்றினை சிறப்பாக செய்தமையைப் பாராட்டி 2007 ஆம் ஆண்டு அவருக்கு அகில இலங்கை சமாதான நீதிவான் பதவியினை இலங்கை அரசு வழங்கிக் கௌரவித்தது.

அன்னார் தனது மனைவியுடன் இறுதிக் காலத்தில் தனது சொந்த ஊரான காரைநருக்கு வந்து விளானையில் தனது வீட்டில் சிறிது காலம் வசித்து வந்த நிலையில் தீராத நோய் வாட்டியதன் காரணமாக மேலதிக சிகிச்சைபெற தனது மருமகளின் (கொழும்பு மட்டக்குளி) வீட்டில் சிறப்பாக இருந்து மகரகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். அந்நிலையில் அவர் மருமகளுக்கும் பிள்ளைகளுக்கும் அன்பாக, மரியாதைக்குரியவராக அன்பு டன் வாழ்ந்து வந்தார்.

இந்நிலையில் 12.04.2015 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவர் இறைபதம் அடைந்தார். அன்னாரது ஆத்மா திக்கரை முருகனின் திருப்பாதம் அடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**

**குடும்பத்தினர்.**
**விளானை, களபூமி**
**காரைநகர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஸ்ரீ கு.சண்முகநாதக் குருக்களின் இரங்கல் உரை

பிறப்பு உண்டேல் இறப்பு நிச்சயம் இது நியதி. மரணத்தை வென்றவர் எவருமில்லை.

"குடம்பை தனித் தொழில் புள்பறந்தே
ஊடம்பொடு உயிரிடை நட்பு"

என்று திருவள்ளுவர் யாக்கை நிலையாமை பற்றிக் கூறியது நோக்கற்பாலது.

"வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து" காட்டியவர் நடேசன். அவர் எல்லோருடனும் அன்பாகப் பேசும் பண்புடையவர். பொறாமை, வஞ்சகமற்றவர், மிகவும் நேர்மையானவர், கடவுள் பக்தி மிக்கவர், வாழ்க்கையிலே சைவநெறியைக் கடைப்பிடித்து தன்னுடன் படித்த நண்பர்களைக் கண்டால் அவர்களுடன் உரையாடுவதில் ஆர்வம் கொண்டவர். ஆலயங்களுக்குச் செல்வதிலும் திருப்பணி வேலைகளில் பங்குபற்றுவதிலும் மிகவும் ஆர்வங்கொண்டு விளங்கினார்.

"பிரிந்தவரைக் கண்டால் பேசவும் வேண்டுமோ" என்ற முதுமொழிக்கு இலக்காக விளங்கியவர். அவரது இல்லற வாழ்க்கை அன்பும் பண்பும் மிக்கதாக விளங்கியது. எல்லாம் எப்பவோ முடிந்தகாரியம், ஒரு பொல்லாப்பும் இல்லை, என்றார் யோகர் சுவாமி. எனவே அன்னார் தமது கடமைகளை முடித்ததும் இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்தாருக்கு எனது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல திக்கரை முருகனையும், பாலவோடை அம்பாளையும், பயிரிடக்கூடல் முருகனையும் அருள்பாலிக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**சிவஸ்ரீ கு.சண்முகநாதக் குருக்கள்**
**பிரதம குரு**
**பியிரிக்கூடல் முருகன்கோயில்**
**களபூமி, காரைநகர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி வாழ வேண்டும் என வாழ்ந்து காட்டியவர் அமரர் நடேசன் அவர்கள்

பெருமையும் சிறப்பும், பழமையும் வரலாற்றுச் சிறப்புமிக்க காரைநகரில் காராளர் விளங்கும் களபூமி பாரினிலே சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வந்த அமரர் நடேசன் அவர்களின் இறப்பு காரைநகர் வாழ் பெரும்க்களுக்கு ஓர் பேரிழப்பு என்பதில் ஐயமில்லை.

அந்த வகையில் எமக்கும் அமரர் நடேசன் அவர்களுக்கும் இடையிலான தொடர்பு சிறிது காலம் தான்;. எனினும் நடேசன் ஐயா அவர்கள் பொதுவான பணி புரிதல், மற்றும் பிறருக்கு உதவுகின்ற ஓர் வழிகாட்டி என்பதனை நான் அவரின் உயர்ந்த செயற்பாடுகளில் இருந்து கண்டுகொண்டேன். அவரைப் போலவே அவரது அன்புத் துணைவியார் இராசு அக்கா அன்புடனும், பண்புடனும் வரவேற்கும் ஒரு குடும்பப் பெண் என்பதனை நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். அத்தோடு அன்னாரது இழப்பு அவரது ஊருக்கே பெரிய இழப்பு என்றால் அது மிகையாது.

எனவே அன்னாரது ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல திக்கரை முருகனின் பாதார கமலத்தில் இறைஞ்சுகின்றோம்.

**சிவஞானம் கபிலன்**
*தலைவர்*
*விளானை சனசமூகநிலையம்*
*காரைநகர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் பொறுமையும் உருவான கம்பளை நடேசன்

எமது அயலவராக சில வருடங்கள் பழகிய அன்புக்குரிய அமரர் குமாரசாமி நடேசனை மறக்க முடியாது. மிதித்த புல்லும் சாகாத மென்மையான சுபாவம் உடைய அவரை நான் ஹட்டன் புனித யொன் பொஸ்கோ கல்லூரியில் கற்பித்த போது இடமாற்றம் கோரி கம்பளை கல்வித் திணைக்களம் சென்றபோது, இவரது கடையருகாலே போவதை அமரர் நடேசன் கண்ணுற்றார். உடனே அவர் மாஸ்டர் என அன்பாக அழைத்து உட்கார வைத்து தேநீர், சிறு உணவு வாங்கி உபசரித்து வழியனுப்பிய காட்சி இன்றும் எனது உள்ளத்தில் நிற்கிறது.

**'பெற்ற தாயும் பிறந்த பொன்நாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே'**

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க தான் பிறந்த கிராமத்திற்கு அளப்பரிய பணிகள் செய்தவர். காரைநகர் கோயில்களில் மகோற்சவம் தொடங்கிவிட்டால் தவறாது பங்குகொள்ளும் பேரன்புக்குரியவர். ஏழை எளிய மக்களுக்கும் தன்னாலான இயன்ற சேவைகளை வழங்குவதில் சமர்த்தன். அயலவர்களாகிய எங்களுடனும் மாத்திரமல்லாது தாயார், சகோதரி, தம்பியார் யாவருடனும் கண்ணியமாக பழகுவார்.

இவரது அன்பு உள்ளத்தைப் பரிசோதிப்பதற்கு இறைவன் மாற்றமுடியாத நோயை வழங்கி தனக்கருகே கொண்டு சென்று விட்டார். தனது ஊரவர் அயலவர், இனத்தவர் சகலருக்கும் தன்னால் இயன்ற உதவியைச் செய்வதில் பின்நிற்க மாட்டார்.

**'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந் நன்றி கொன்ற மகற்கு'**

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க எல்லோருக்கும் உதவி செய்து வாழ்ந்தவர். இவ்வாறாக அருங்குணம் படைத்தவர் நம்முடன் இல்லாவிட்டாலும் அவர் இறைவன் பாதங்களை அடைய பிரார்த்திப்பதோடு, அவரை இழந்து துன்பப்படுகின்ற அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அமைகின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**தம்பையா அம்பிகைபாகன்** *B.A Dip in Ed.*
முன்னாள் ஆசிரிய ஆலோசகர்
விளானை, களபூமி, காரைநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை உரை

மரணத்தை வெல்லுபவர் யாரும் இல்லை. இறைவனுக்கே அன்றி மற்றொருவருக்கும் நித்தியப் பெரு வாழ்வு இல்லை என்பது இந்து மதத்தின் முடிந்த முடிவு. மரணம் என்பது உரு மாற்றமே இன்றி வேறில்லை. ஆன்மா அழிவில்லாதது. அது தான் தங்கியிருக்கும் உடம்பை மாற்றிக் கொள்வதுதான் மரணம் என்று அழைக்கப்படுவது.

விதியை வெல்லுபவர் யாருமில்லை. அமரர் குமாரசாமி நடேசன் அவர்களும் அதற்கிணங்க 12.04.2015 அன்று இவ்வுலகை நீத்து விண்ணுலகு எய்திவிட்டார். அன்னார் இன்னும் சில காலம் வாழ்ந்திருக்கலாம். ஆனால் விதி சதி செய்து விட்டதே என்று கூற வேண்டும்.

அன்னார் ஊரில் வந்து நிற்கும் போது, அவருடன் நான் சிறிது காலம் பழகினேன். அன்னார். எவரோடும் அன்பாகவும், பண்பாகவும் பேசிப்பழகும் பண்புடையவர். யாரைக் கண்டாலும் சிரித்த முகத்துடன் தலையை அசைத்து மரியாதை செலுத்துவார். இறை பக்தி கொண்டவர். கம்பளை முத்துமாரி அம்மன் கோயில் பரிபாலன சபையில் ஓர் அங்கத்தவராக இருந்து அரும்பெரும் பணிகளை ஆற்றியவர். பலரோடும் வேறுபாடின்றிப் பழகிப் பல நண்பர்களைப் பெற்றவர் என்பதனை அன்னாரின் இறுதிக்கிரியையில் காணக் கூடியதாக இருந்தது.

அன்னார் மற்றவர்களுக்குச் சந்தர்ப்பம் கருதி உதவி செய்ய வேண்டிய இடத்து தம்மால் இயன்ற உதவிகளைச் செய்யும் பண்புள்ளம் கொண்டவர். அன்றியும் சிறந்த அம்பாள் பக்தர். பெற்ற தாயையும் பிறந்த தன் நாட்டையும் நேசிக்கும் பண்புள்ளம் கொண்டவர்.

பிறக்கின்ற போது இறக்கின்ற நாளும் இறைவனால் எழுதப்பட்டு விடுகின்றது. ஒருவன் தான் முற்பிறப்பில் செய்த பிராத்த வினையை அனுபவித்து முடித்து விட்டால் வாழ்க்கை முடிந்து விடுகின்றது. நம்பிக்கையுள்ள யாரும் இதனை நன்கு அறிவர்.

'எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்', 'ஒரு பொல்லாப்பும் இல்லை', 'முழுவதும் உண்மை' இது யோகர் சுவாமிகளின் அருள்வாக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அன்னாரது இழப்பு அவரது குடும்பத்திற்கும், உற்றார்,உறவினருக்கும் பேரிழப்பாகும். அவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கம்பளை முத்துமாரி அம்பாள் அருள் புரிவாராக.*

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

**க.தில்லையம்பலம்**
***(ஓய்வு நிலை அதிபர்)***
***விளானை, களபூமி, காரைநகர்.***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோருக்கும் நல்லவராக வாழ்ந்து மறைந்த நடேசு

நடேசு என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் களபூமியைப் பிறப்பிடமாகக் கொண்ட குமாரசாமி நடேசு தமது 62 ஆவது வயதில் மறைந் தார் என்ற செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைந்தேன்.

இராமுடையார் குலத்து கணபதிப்பிள்ளை இராஜபூபதியை திருமணம் செய்து வாழ்க்கை நடத்தி வந்த சூரியன் பரம்பரை நடேசு குடும்பப் பாசத் தோடு வாழ்ந்து வந்தவர்.

அவர் உறவினராகவிருந்தாலும், ஒரு நெருங்கிய நண்பராக என்னுடன் பழகி வந்தவர். அவரிடம் காணப்படும் அரும்பெரும் குணம் உள்ளன்போடு நேசித்துப் பழகும் பண்பாகும்.

நான் 2002 இல் இந்து அமைச்சில் பணியாற்றிய காலத்தில் அடிக்கடி கம்பளை செல்வேன். அங்கு அவர் குடும்பத்துடன் வாழ்ந்து வந்த காலம். கணவன், மனைவி இருவரும் என்னை வரவேற்று உபசரித்ததை மறக்கமுடி யாது. அமரர் நடேசு அவர்கள் ஒரு சமயப் பற்று மிகுந்தவர். கம்பளையிலுள்ள ஆலயங்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்.

என்னுடன் உறவினர் என்று மட்டுமல்லாது ஒரு தமிழ் கட்சிவாதியென்ற ரீதியிலும் பழகியவர். நாட்டுப் பற்றும் இனப்பற்றும் கொண்ட இவர் கம்ப ளையில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தாலும் தமிழர் சுயாட்சி பெறவேண்டு மென்ற உணர்வுடன் வாழ்ந்தவர். அன்று காரைநகரில் நடைபெற்ற தமிழ் அரசுக் கட்சிக் கூட்டங்களுக்கு ஆதரவளித்து முன்னின்று உழைத்தவர். ஒரு வர்த்த கராகவிருந்தாலும் அரசியல் பற்று மிகுந்தவராக வாழ்ந்து வந்தவர்.

இவர் சிங்கள அரசியல் வாதிகளோடு நெருங்கிய தொடர்புடையவர். பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவிருந்த அனுரத்தரத்வத்தையுடன் நெருங்கிய தொடர்பு டையவராக இருந்தவர். இராணுவத்தினரால் கைது செய்யப்படும் தமிழ் இளை ஞர்களை விடுவிப்பதற்கு தமது செல்வாக்கைப் பயன்படுத்தியதாக அறிந் தேன்.

எது எதைத் தன்னால் செய்யமுடியுமோ அதையெல்லாம் உள்ளச் சுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோடு செய்து வந்த பெருமகனார். தனது உற்றார், உறவினர், நண்பர்களின் நிகழ்வுகளில் தவறாது பங்கு பற்றும் பண்பாளர்.

இத்தகைய ஒருவரை இழந்துவிட்டோம். தமிழ் மண்ணில் வாழ வேண்டும் என்ற சிந்தனை கொண்ட அவரது இறுதி யாத்திரை பிறந்த மண்ணிலே நடந்தது அவருக்கு ஆத்மசாந்தி.

அன்னாரது இறுதிக்கிரியைகளில் பங்குபற்ற முடியவில்லை. எனது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றேன்.

அன்னாரின் பிரிவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் எனது சகோதரி இராஜபூபதிக்கும், உற்றார், உறவினர் அனைவருக்கும் ஆழ்ந்த கவலையையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய திக்கரை முருகப் பெருமானைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**ஐ.தி.சம்பந்தன்**
**இலண்டன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருந்தளித்து நிதிவழங்கும் குடும்பம்

களபூமி *'Greenfield of Karainagar'* என்று ஒருகாலத்தில் கருதப்பட்டது. ஏனென்றால் இங்குதான் பல விவசாயக் குடும்பங்கள் வாழ்ந்து நெல் முதல் பலதரப்பட்ட தானியங்களை உற்பத்தி செய்து உள்ளூர், வெளியூர் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை விநியோகித்து வந்தனர். உதாரணமாக தம்பன் கத்தரிக்காயைப் பற்றி இங்கிலாந்து வாழ் காரை மக்களிடமிருந்து கூடக் கேள்விப்பட்டிருக்கின்றேன். காலப் போக்கில் களபூமி மக்களும் வியாபாரம், உத்தியோகம் போன்ற துறைகளில் ஈடுபடத் தொடங்கினர். அந்த வழியிலே கம்பளைக் குமாரசாமி குடும்பம் வியாபாரத்துறையில் ஈடுபட்டு சீரும் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர். பூம்புகாரில் குறிப்பிட்ட வணிகர் குடும்பங்கள் போன்று கம்பளைக் குமாரசாமி குடும்பமும் ஈட்டிய பொருளினைத் தாராளமாகத் தான தருமங்களுக்கு வழங்குபவர்கள். பூம்புகார் வணிகர்களைப் போன்று நிதி வேண்டிப் போவோருக்கு விருந்துபசாரமும் அளித்து கௌரவிக்கும் பண்பு கொண்ட குடும்பம் இது. தம்பி நடேசனை சந்தித்து அளவளாவிய சந்தர்ப்பங்கள் ஒரு சிலவாக இருந்தாலும் அந்நேரங்களில் அவர் சிரித்த முகத்துடனும், பரஸ்பர மரியாதையுடனும் பழகிய விதம் என்னால் என்றும் மறக்க முடியாது. அன்னாரது ஆத்மா சாந்தியடைந்து திக்கரை முருகனின் திருவடி நிழலின் கீழ் முத்திபெற எல்லாம் வல்ல அம்முருகப் பெருமானை வேண்டுகின்றேன்.

'திக்கரை முருகன் திருவடி போற்று
அக்குருபரன் அருள் அள்ளியே தருவான்'
-'வீரமணி ஐயர்'

**சிவா.தி.மகேசன்**
**தலைவர்**
**விளானை கிராம அபிவிருத்திச் சங்கம்**
**திக்கரை முருகமூர்த்தி கோயில் அறங்காவலர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

TAMIL NATIONAL ALLIANCE

දෙමළ ජාතික සංධානය

06-06-2015. உ யாழ்ப்பாணம்

சிவமயம்

பாசமிகு அண்ணரின் நினைவலைகள்

"பெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு"
என்ற வள்ளுவரின் கூற்றுக்கிணங்க அமரர் நடேசன் அண்ணர் அவர்கள் சிவபதம் அடைந்துவிட்டார் என்று கேள்விப்பட்டதும் பெரிதும் அதிர்ச்சி அடைந்தேன்.

"எல்லாம் அவன் செயல்" நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்றை நினைத்துவிட்டது. விதியை யார் தான் வெல்ல முடியும். எனது பேரன்பிற்குரிய நடேசண்ணரும் விதிக்கும் ஆளாகிவிட்டார். பிறப்புண்டேல் இறப்பு நிச்சயம் இதற்கு யாரும் விதிவிலக்கல்ல.

" அரிது அரிது மானிடராதல் அரிது அதிலும் கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது"
என்ற ஔவையாரின் வாக்கிற்கிணங்க சூரியவம்ச பரம்பரையில் அரியதொரு பிறப்பெடுத்து வாழ்ந்த நாட்களில் அனைவருடனும் மிகுந்த அன்புடன் அந்நியோன்னியமாக பழகி தனக்கென ஒரு இடத்தை பிறந்த ஊரான காரைநகரிலும் வர்த்தகம் செய்து வாழ்ந்த ஊரான கம்பளையிலும் தக்க வைத்தவர். தன்னைத் தேடிவந்திருந்த உறவுகளுக்கு தன்னாலான உதவிகளையும் அறிவுரைகளையும் மனம் கோணாது செய்திருந்தார் என்பதை அவரது மரணச் சடங்கில் கலந்து கொண்ட மக்கள் கூட்டம் எடுத்தியம்பியிருந்தது என்றால் அது மிகையாகாது.

சூரிய வம்சத்திற்குரித்தான சைவாலயத் திருப்பணிகளையும் சிவாலயத் திருத்தொண்டுகளையும் சிறப்பாக மேற்கொண்டு வந்த நடேசண்ணர் அறப்பணிகளில் கந்தரமூர்த்தி அண்ணரின் சேவைகளை அவரது மறைவையடுத்து அவற்றை தொடர்ந்து முன்னெடுத்திருந்த மகனான அருணகிரிநாதருடன் கைகோர்த்து கம்பளையில் ஆலயத் தொண்டுகளை செய்வதிலும் திறம்பட செவ்வனே செயற்பட்டிருந்தார்.

வர்த்தகத்தில் பெரியப்பா குமாரசாமியுடனும் அவர் இறந்ததன்பின் சகோதரர்களுடனும் சேர்ந்து ஈடுபட்டு வந்த நடேசண்ணர் கம்பளை மக்களுடன் குடும்ப அங்கத்தவர் போல் அனைவருடனும் பழகி அவர்களுக்கும் நன்குதவி ஆலோசனைகளையும் வழங்கி நன்மதிப்பை பெற்றிருந்தார். கந்தரமூர்த்தியண்ணரின் மறைவின் பின்னரான காலகட்டங்களில் தம்பி பத்மநாதனுடன் சேர்ந்து வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த அதேவேளை மகனாகிய அருணகிரிநாதரின் வர்த்தகத்திற்கும் மிகவும் உறுதுணையாக இருந்திருந்தார்.

சீரற்ற, தவறான நடைமுறைகளினால் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் சூரியவம்ச பரம்பரையினருக்குரிய ஆலயமான பாலாவோடை குறிஞ்சாக்குளி முத்துமாரி அம்பாளின் தேவஸ்தானத்தைக் கையேற்று கம்பளையிலுள்ள கோவிலைப்போல மிகச்சிறந்த முறைப்படி நடாத்த வேண்டுமென்று கனவுகண்டு பலதடவைகள் என்னுடனும் கலந்தாலோசித்திருந்திருந்தார்.

தான் கொண்ட கொள்கையில் தனித்துவமாகவும் எமது இனத்தின் உரிமைக்குரலாகவுமிருந்த எமதண்ணர் நான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்பாக 2013ஆம் ஆண்டு வடமாகாண சபைத் தேர்தலில் பங்குபற்றியிருந்தவேளை எனக்கு வலக்கரமாகவிருந்து எனது மருமகன் குமாருடன் காரைநகர் பூராகவும் வீடுவீடாகச் சென்று பிரச்சாரங்களை மேற்கொண்டிருந்தார். என்னைப் பொறுத்தவரை அவரது இழப்பு என்றைக்குமே ஈடுசெய்ய
முடியாத பேரிழப்பாகும்.

அவரது பிரிவால் துயருறும் தாயார், மனைவி, சகோதர சகோதரிகள், மைத்துன மைத்துனிமார்கள், பேறமக்கள் குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அநுதாபத்தை தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய சூரிய வம்ச குலதெய்வமான பாலாவோடை குறிஞ்சாக்குளி முத்துமாரி அம்பாளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

தம்பி மு தம்பிராசா

Thampi Ka Mu Thambirajah Candidate for Nothern Provincial Election 2013 Jaffna District
Mobile: (+94) 77 738 2343 Tel: (+94) 21 222 2823 Fax: (+94) 21 222 2504 E-mail: thampitna@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் நிறைந்த மனிதர்

அமரர் குமாரசாமி நடேசன் அவர்களுடன்
பள்ளிக் காலத்தில் இருந்து பழகியவன்.
நண்பர், உறவினர் எனும் உறவு எம்மிடையே இருந்தது.
என்றும் மலர்ந்த முகம்.
இன்முகத்துடன் வரவேற்று உபசரித்து அன்புரிமையுடன்
உறவாடும் பண்பாளன்.
மனிதம் நிறைந்த மனிதர்.
சிறப்புமிக்க மனிதர் ஒருவரை இறைவன் விரைந்து தன்னகத்தே
அழைத்துக் கொண்டார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

எஸ்.கே.சதாசிவம்
ஓய்வுநிலை அதிபர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

(திருப்பெருந்துறை)



திருச்சிற்றம்பலம்

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூரெங்கோன்
திருவாசகமென்னுந் தேன்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள் மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லாவினையேன் ப்கழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற வித்தாவர சங்கமத்துள்
எல்லா பிறப்பும் பிறந் திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தக ன்றநுண்ணி யனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானமில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னையகல் விக்கும் நல்லறிவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்கு வாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்தப் பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்றசோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்றப் பெருங்க ருணைப் பேராறே
ஆராவ முதேயள விலாப் பெம்மானே
ஓராதாரு ள்ளத்தொ ளிக்கும் ஒளியானே
நீராயு ருக்கியென் ஆருயிராய் நின்றானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமும் துன்பமும் இல்லானே யுள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனேய ந்தம்நடு வாகியல் லானே
ஈர்த்தென்னையாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமி லாப்புண்ணியனே
காக்கும் எங்காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெள;வேறே வந்தறி வாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதேயு டையானே
வேற்றுவி காரவிடக் குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்துவினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென் பாண்டிநா ட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்துசொல் லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சி



திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே!
புலர்ந்தது; பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

அருணண்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற்று அண்ணலங் கண்ணாம்
திரள்நிறை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லே பள்ளி எழுந்தரு ளாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூவின பூங்குயில்; கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்;
ஓவின தாரகை ஒளியொளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவ நற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரியாய ;எமக் கெளியாய்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே

இன்னிசை வீணையர் யாழினர், ஒருபால்;
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்;
துன்னிய பிணைமலர்க் கையினர், ஒருபால்;
தொழுகையர், அழுகையர், துவள்கையர் ஒருபால்;
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்;
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே

பூதங்கள் தோறும் நின்றாய்எனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம் உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே

பப்பற வீட்டிருந்து உணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தார் அவர் பலரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைப்புறு கண்ணியர்; மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா!
செப்புறு கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப்பு அறுத்துஎமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன்அவன்; எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கெழுந்தருளும்
மதுவளர் பொழில்சூழ் திருஉத்தர கோச
மங்கையுள் ளாய் திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளுமாறது கேட்போம்;
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்;
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் னடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி,
அந்தணன் ஆவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தே பள்ளி எழுந்தரு ளாயே

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொருளே உன் தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய் வழி யடியோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தே! கரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்! உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

புவனியில் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் னலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியில் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்!
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

**திருச்சிற்றம்பலம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை



**திருச்சிற்றம்பலம்**

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
   சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
   மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
   போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேஎன்னே
   ஈதே எம்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
   பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
   சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
   கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
   ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடை திறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்தாட்கொண்டாற்பொல்லாதோ
எத்தோ நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.

ஒண்ணித் தில நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோ ம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடை திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்(று)
ஓலமிடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.

அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோம்கேள் வெள;வேறா யின்னுந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை யாமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பவாய்.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னவரே எங்கணவ ராவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய்.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையால் குடைந்து குடைந்து உன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான் பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற் போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்(று)
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம் கேள்
எம்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

**திருச்சிற்றம்பலம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்



### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்கு செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலனருள்
கந்தர் சஷ்டி கவசம் தனை.

### குறள் வெண்பா

**அமரரிடர் தீர வமரம் புரிந்த**
**குமரனடி நெஞ்சே குறி**

### நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி யாட
மையல் நடஞ் செயும் மயில்வாகனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற!
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக! வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந் தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவ்வும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமுந் தரித்து
நன் மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்ப ட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்.
இரு தொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம் பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொக மொக மொக மொக மொக மொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடி புனை நெற்றியைப் புனித வேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம் பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண்குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத் தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணை வேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு துமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும் பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர் வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வாலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங்காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பாவைகளும்
பூனைமயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ்ச சனமும் ஒருவழிப்போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட்டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடல் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால் கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலைநோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைசல் சிலந்தி குடல்விப் பிரிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரேழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும்;;; அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனிய வேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாச வினைகள் பற்றது நீங்கி
உன் பதம் பெறவே உன் அருளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத் தாகவேலாயுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பதுன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென்றன் பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்ற டியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்ப வர்கள்
ஒரு நாள் முப்பத் தாறு உருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசை மன்ன ரெண்மர் சேர்ந்தங்க ருளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றலரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்தநாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர் கைவேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப் பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கர ரத்தடி
அறிந் தெனதுள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத் தேள்வர் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சிப் புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற் சுண்ணம்



திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாழம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சக்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடுபல்லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன்அம்மானைபாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந்தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன்சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற் (கு)
கேய்ந்த பொற்சுண்ணம் இடித்துநாமே.

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல்லாம் புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாசவினையைப் பறிந்துநின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

அறுகெடுப்பார் அயனும்அரியும்
அன்றிமற்றிந்திர னோடமரர்
நறுமுது தேவர்கணங்கெளெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற் (கு)
காடப்பொற்சுண்ணம் இடித்துநாமே.

உலக்கை பலஒச்சு வார்பெரியர்
உலகமெலாம்உரல் போதாதென்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்து நாமே.

சூடகந் தோள்வரை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடக மெல்லடி யார்க்கு மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

வாள்தடங்கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதரு தென்னன் பெருந்துறையான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே.

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே.

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெருமானைத்தேடி
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்(கு)
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே.

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பிரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு (து) எங்களப்பன்
எம்பெருமான் இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச்சுண்ணம் இடித்துநாமே.

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயிதழுந்துடிப்பச்
சேயிழை யீர் சிவலோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச்சுண்ணம் இடித்து நாமே.

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும் வந்தன்பர்தம்மோ (டு)
டாட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான் புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்துநாமே.

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேன்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிச்சுண்ணம் இடித்துநாமே.

அயன்தலை கொண்டுசெண்டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக்காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே.

வட்டமலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதியம்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக்கச்சைப் பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச்சுண்ணம் இடித்துநாமே.

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதிய மாய் இருள் ஆயினார்க்குத்
துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய் வீடும் ஆயினார்க்(கு)
ஆதியும் அந்தமும் ஆயினார்க்(கு)
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே.

**திருச்சிற்றம்பலம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனற் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே. 3

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே. 3

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே. 5

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே. 6

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே. 7

சொல்விற் பனமு மவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே. 8

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே சகல கலாவல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அந்தாதி



**கணபதி காப்பு**

தாரமர் கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும் தில்லை
ஊரார் தம் பாகத்து உமைமைந்தனே! உலகு ஏழும் பெற்ற
சீர் அபிராமி அந்தாதி எப்போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே! நிற்க கட்டுரையே.

**நூல்**

உதிக்கின்ற செங்கதிர், உச்சித்திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக்குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழித்துணையே.

துணையும் தொழும் தெய்வமும், பெற்றதாயும் சுருதிகளின்
பணையும், கொழுந்தும் பதி கொண்டவேரும் பனிமலர்பூங்
கணையும், கருப்புச்சிலையும், மென்பாசாங்குசமும், கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே.

அறிந்தேன் எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே, திருவே! வெருவிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தேன் நின்அன்பர் பெருமைஎண்ணாதகரும நெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே.

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றைவார்சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும், பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என்புந்தி எந்நாளும் பொருந்துகவே.

பொருந்திய முப்புரை! செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி! வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை! அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே.

சென்னியது உன்பொன் திருவடித்தாமரை; சிந்தையுள்ளே
மன்னியது உன் திருமந்திரம்; சிந்துர வண்ணப்பெண்ணே!
முன்னிய நின் அடி யாருடன் கூடி முறை முறையே
பன்னியது என்றும் உன் தன் பரமாகம பத்ததியே.

ததியுறு மத்திற் சுழலும் என்ஆவி தளர்விலதோர்
கதியுறும் வண்ணம் கருது கண்டாய்; கமலாலயனும்,
மதியுறு வேணி மகிழ்நனும், மாலும் வணங்கிஎன்றும்
துதியுறு சேவடியாய்! சிந்துரானன சுந்தரியே.

சுந்தரி! எந்தை துணைவி! என் பாசத் தொடரைஎல்லாம்
வந்தரி; சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி; நீலி; அழியாத கன்னிகை; ஆரணத்தோன்
சுந்தரி; கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே.

கருத்தன, எந்தை தன் கண்ணன், வண்ணக் கனகவெற்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருத்தன, பால்அழும் பிள்ளைக்கு நல்கின, பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும், செங்கைச் சிலையும், அம்பும்
முருத்தனமூரலும், நீயும், அம்மே! வந்துஎன்முன் நிற்கவே.

நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் நினைப்பது உன்னை;
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள்; எழுதாமறையின்
ஒன்றும் அரும் பொருளே! அருளே! உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே! அழியா முத்தி ஆனந்தமே!

ஆனந்தமாய் என் அறிவாய், நிறைந்த அமுதமுமாய்,
வான் அந்தமான வடிவுடையாள், மறை நான்கினுக்கும்
தான் அந்தமான சரணார விந்தம் தவளநிறக்
கானம் தம் ஆடரங்கம் எம்பிரான் முடிக்கண்ணியதே.

கண்ணியது உன்புகழ் கற்பது உன்; நாமம் கசிந்து பத்தி
பண்ணியது உன் இருபாதாம் புயத்தில்; பகல் இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து; நான் முன்செய்த
புண்ணியம் ஏது என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே.

பூத்தவளே புவனம் பதினான்கையும்; பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே! கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே!
மாத்தவளே உன்னை அன்றிமற்றோர் தெய்வம் வந்திப்பதே!

வந்திப்பவர் உன்னை வானவர், தானவர், ஆனவர்கள்;
சிந்திப்பவர் நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே;
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர்; பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண் ஒளியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணளிக்கு என்றுமுன்னே பலகோடிதவங்கள் செய்வார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார்? மதிவானவர் தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியா முத்தி வீடுமன்றோ?
பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே.

கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து, கிளர்ந்து, ஒளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே! வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே!
அளியேன் அறிவளவிற்கு அளவானது அதிசயமே.

அதிசயமான வடிவுடையாள், அரவிந்தமெல்லாம்
துதிசய ஆன சுந்தரவல்லி, துணைஇரதி
பதிசயமானது அபசயம் ஆக முன் பார்த்தவர் தம்
மதிசயமாக அன்றோ வாமபாகத்தை வவ்வியதே.

வவ்விய பாகத்து இறைவரும், நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் என்மேல்வரும் போது வெளிநிற்கவே.

வெளிநின்ற நின் திருமேனியைப்பார்த்தேன் விழியும் நெஞ்சும்,
களிநின்ற வெள்ளம் கரை கண்டதில்லை; கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது என்ன திருவுளமோ?
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.

உறைகின்ற நின் திருக்கோயிலில் நின்கேள்வர் ஒருபக்கமோ?
அறைகின்ற நான்மறையின் அடியோ? முடியோ? அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ? கஞ்சமோ? எந்தன் நெஞ்சமோ?
மறைகின்ற வாரிதியோ? பூரணாசல மங்கலையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கலை! செங்கலசம் முலையாள்! மலையாள்! வருணச்
சங்கலை செங்கை! சகலகலாமயில்! தாவுகங்கை
பொங்கு அலைதங்கும் புரிசடையோன் புடையாள்! உடையாள்!
பிங்கலை! நீலி! செய்யாள்! வெளியாள்! பசும் பொற்கொடியே.

கொடியே! இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த
படியே! மறையின் பரிமளமே! பனிமால் இமயப்
பிடியே! பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே!
அடியேன் இறந்து இங்கு இனிப்பிறவாமல் வந்தாண்டு கொள்ளே.

கொள்ளேன் மனத்தில் நின்கோலம் அல்லாது; என்பர் கூட்டம் தன்னை
விள்ளேன்; பரசமயம் விரும்பேன்; வியன் மூவுலகுக்கு
உள்ளே, அனைத்தினுக்கும் புறம்பே உள்ளத்தே விளைந்த
கள்ளே! களிக்கும் களியே அளிய என் கண்மணியே.

மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்கு அழகே! அணுகாதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே!
பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்தபின்னே.

பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன்; முதல் மூவருக்கும்
அன்னே! உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே!
என்னே! இனி உன்னையான் மறவாமல் நின்று ஏத்துவனே.

ஏத்தும் அடியவர் ஈரேழுலகினையும் படைத்தும்,
காத்தும், அழித்தும் திரிபவராம்; கமழ் பூங்கடம்பு
சாத்தும்குழல் அணங்கே! மணம் நாறும் நின்தாள் இணைக்கு என்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடத்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைத்தனை வஞ்சப் பிறவியை; உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை; பத்மபதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை; நெஞ்சத்து அழுக்கை எல்லாம் நின் அருள்புனலால்
துடைத்தனை; சுந்தரி! நின்னருள் ஏதென்று சொல்லுவதே.

சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே.

சித்தியும், சித்திதரும் தெய்வமுமாகத் திகழும்
பராசத்தியும், சக்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்
முத்தியும், முத்திக்கு வித்தும் ,வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும், புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.

அன்றே தடுத்து! என்னை ஆண்டுகொண்டாய்; கொண்டதல்ல என்கை
நன்றே உனக்கு இனி நான் என்செயினும், நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகை நின் திருவுளமே;
ஒன்றே! பல உருவே! அருவே! என் உமையவளே!

உமையும், உமையொரு பாகனும் ஏக உருவில் வந்திங்கு
எமையும் தமக்கு அன்பு செய்ய வைத்தார்; இனி எண்ணுதற்குச்
சமையங்களும் இல்லை; ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை;
அமையும் அமையுறு தோளியர் மேல் வைத்த ஆசையுமே.

ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன் கைப்
பாசத்தில் அல்லல்பட இருந்தேனை, நின் பாதம் என்னும்
வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டு கொண்ட
நேசத்தை என் சொல்லுவேன்? ஈசர்பாகத்து நேரிழையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழைக்கும் வினைவழியே ஆடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்து அஞ்சல் என்பாய்; அத்தர் சித்தமெல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமலைக் கோமளையே!
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே.

வந்தே சரணம் புகும் அடியாருக்கு வான்உலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும் பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே.

திங்கள் பசுவின் மணம் நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்கு ஒருதவம் எய்தியவா! எண்ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ? தரங்கக் கடலுள்
வெங்கண் பணியணைமேல் துயில்கூரும் விழுப்பொருளே.

பொருளே! பொருள் முடிக்கும் போகமே! அரும்போகம் செய்யும்
மருளே! மருளில் வரும் தெருளே என் மனத்து வஞ்சத்து
இருளேதும் இன்றி ஒளிவெளியாகி இருக்கும் உன்தன்
அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே!

கைக்கே அணிவது கன்னலும் பூவும்; கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை; விட அரவின்
பைக்கே அணிவது பண்மணிக்கோவையும் பட்டும், எட்டுத்
திக்கே அணியும் திருவுடையான் இடம் சேர்பவளே!

பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும், பனிமுறுவல்
தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணை முலையாள்
அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுகைக்கு உன் தன் அடித்தாமரைகள் உண்டு; அந்தகன்பால்
மீளுகைக்கு உன் தன் விழியின் கடைஉண்டு; மேல் இவற்றின்
மூளுகைக்கு என்குறை; நின்குறையே அன்று; முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான் பங்கில் வாள்நுதலே!

வாணுதல் கண்ணியை, விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியைப் பேதைநெஞ்சில்
காணதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே.

புண்ணியம் செய்தனமே மனமே! புதுப் பூங்குவளைக்
கண்ணியும், செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால்
நண்ணி இங்கே வந்து தம் அடியார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல் பத்மபாதம் பதித்திடவே.

இடம் கொண்டு விம்மி, இணைகொண்டு இறுகி, இளகி, முத்து
வடம்கொண்ட கொங்கை மலை கொண்டு, இறைவர் வலிய நெஞ்சை
நடம்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப்பரிபுரையே.

பரிபுரச் சீறடி! பாசாங் குசை! பஞ்ச பாணி! இன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
பரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப்புச் சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே.

தவளே! இவள் எங்கள் சங்கரனார் மனை மங்கலமாம்
அவளே, அவர் தமக்கு அன்னையும் ஆயினள்; ஆகையினால்
இவளே, கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன், இனியொரு தெய்வம் உண்டாக மெய்த்தொண்டு செய்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டு செய்யாது நின் பாதம் தொழாது, துணிந்து இச்சையே
பண்டு செய்தார் உளரோ? இலரோ? அப்பரிசு அடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ? அன்றிச் செய்தவமோ?
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே; பின் வெறுக்கை அன்றே.

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம் அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே; புது நஞ்சைஉண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்துபொன்னே!
மறுக்கும் தகைமைகள் செய்யினும், யான் உன்னை வாழ்த்துவேனே!

வாழும்படி ஒன்று கண்டு கொண்டேன்; மனத்தே ஒருவர்
வீழும்படி அன்று, விள்ளும் படி அன்று, வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதிந்து நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார் பின்னும் எய்துவரோ;
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி வெங்கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை அமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல்என்பாய்;
நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே.

நாயகி; நான்முகி; நாராயணி; கை நளின பஞ்ச
சாயகி; சாம்பவி; சங்கரி; சாமளை; சாதிநச்சு
வாயகி; மாலினி; வாராகி; சூலினி; மாதங்கி என்று
ஆயகி ஆதி உடையாள் சரணம் அரண் நமக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரணம் பொருள் என்றருள் ஒன்றிலாத அசுரர் தங்கள்
முரண்அன்றழிய முனிந்த பெம்மானும், முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன் அடியார்
மரணம், பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே.

வையம், துரகம், மதகரி, மாமகுடம், சிவிகை
பெய்யும் கனகம், பெருவிலை ஆரம், பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு, அன்பு முன்பு
செய்யும் தவம் உடையார்க்கு உளவாகிய சின்னங்களே.

சின்னஞ்சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்,
பென்னம் பெரிய முலையும், முத்தாரமும் பிச்சிமொய்த்து
கன்னங்கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில் வைத்துத்
தன்னந்தனி இருப்பார்க்கு இது போலும் தவமில்லையே.

இல்லாமை சொல்லி ஒருவர் தம்பால்சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல், நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

மின்னாயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்றது
அன்னாள்; அகமகிழ் ஆனந்தவல்லி; அருமறைக்கு
முன்னாய் நடுஎங்குமாய் முடிவாய முதல்விதன்னை
உன்னாது ஒழியினும், உன்னினும் வேண்டுவது ஒன்று இல்லையே.

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகம் எங்குமாய்
நின்றாள், அனைத்தையும் நீங்கி நிற்பாள்என்தன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா; இப்பொருள் அறிவார்
அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறம்செய்யும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்தன் மெய்யருளே.

அருணாம் புயத்தும் என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயத்தும் முலைத்தையல் நல்லாள், தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்,
சரணாம் புயமும் அல்லாற் கண்டிலேன் ஒருதஞ்சமுமே.

தஞ்சம் பிறதில்லை ஈதல்லது என்று உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒன்றை; நீள்சிலையும்
அஞ்சும் அம்பும் மிக்கலராக நின்றாய்; அறியார் எனினும்
பஞ்சு அஞ்சும் மெல்லடியார் அடியார் பெற்ற பாலரையே.

பாலினும் சொல் இனியாய்! பனி மாமலர்ப்பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்கநின்றோன் கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு
நாலினும் சாலநன்றோ அடியேன் முடைநாய்த்தலையே?

நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்தாய் என்ன பேறுபெற்றேன்?
தாயே! மலைமகளே! செங்கண்மால் திருத்தங்கச்சியே.

தங்கச்சிலை கொண்டு தானவர் முப்புரம் சாய்த்து, மத
வெங்கண் கரிபுரி போர்த்த செஞ்சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி! கோகனகச்
செங்கைக் கரும்பும், அலரும் எப்போதும் என் சிந்தையதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேறும்படி சில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும்பொருள் குன்றில்கொட்டும் தறிகுறிக்கும்; சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயம் உண்டென்று கொண்டாடிய வீணருக்கே.

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்க அன்பு
பூணேன்; உனக்கு அன்பு பூண்டு கொண்டேன்; நின்புகழ்ச்சியன்றிப்
பேணேன்; ஒருபொழுதும் திருமேனி பிரகாசமின்றிக்
காணேன் இருநிலமும் திசை நான்கும் ககனமுமே.

ககனமும், வானமும், புவனமும் காணவிற் காமன் அங்கம்
தகனம்முன் செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்
முகனும் முந்நான்கு இருமூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயது அன்றோ? வல்லி நீ செய்த வல்லபமே!

வல்லபம் ஒன்றறியேன்; சிறியேன் நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்று ஒன்றிலேன் பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய்; வினையேன்தொடுத்த
சொல் அவமாயினும் நின்திருநாமங்கள் தோத்திரமே.

தோத்திரம் செய்து, தொழுது, மின்போலும் நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனதில் வையாதவர் வண்மை, குலம்
கோத்திரம், கல்வி, குணம், குன்றி நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்கு உழலாநிற்பர் பாரெங்குமே.

பாரும், புனலும், கனலும், வெங்காலும், படர்விசும்பும்,
ஊரும் முருகு சுவைஒளி ஊறொலி ஒன்றுபடச்
சேரும் தலைவி, சிவகாமசுந்தரி சீரடிக்கே
சாரும் தவமுடையார் படையாத தனம் இல்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனந்தரும்; கல்வி தரும்; ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும்; தெய்வ வடிவுந்தரும்; நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும்; நல்லன எல்லாம் தரும்; அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

கண்களிக்கும்படி கண்டுகொண்டேன் கடம்பாடவியில்
பண்களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன் பேரழகே.

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாதவல்லி; அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம் புயத்தாள்; பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றுநெஞ்சே இரங்கேல் உனக்கு என் குறையே!

என்குறை தீரநின்று ஏத்துகின்றேன்; இனி யான் பிறக்கின்
நின்குறையே அன்றி யார் குறை காண்; இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்?
தன்குறை தீர எங்கோன் சடைமேல்வைத்த தாமரையே.

தாமம் கடம்பு; படைபஞ்சபாணம்; தனுக்கரும்பு;
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது; எமக்கென்று வைத்த
சேமம் திருவடி; செங்கைகள் நான்கு; ஒளி செம்மை; அம்மை
நாமம் திரிபுரை; ஒன்றோடு இரண்டு நயனங்களே.

நயனங்கள் மூன்றுடை நாதனும், வேதமும், நாரணனும்
அயனும் பரவும் அபிராமவல்லி அடியிணையப்
பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும், பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்குவர் கற்பகத் தருவின் நீழலில்; தாயரின்றி
மங்குவர், மண்ணில் வழுவாப் பிறவியை; மால்வரையும்
பொங்குவர் அழியும்! ஈரேழ்புவனமும் பூத்த உந்திக்
கொங்கிவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே.

குறித்தேன் மனத்தில் நின்கோலம் எல்லாம்; நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலிவருகின்ற நேர்வழி; வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒருகூற்றை மெய்யில்
பறித்தே குடிபுகுதும் பஞ்சபாண பயிரவியே.

பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்சபாணி, வஞ்சவர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி, காளி ஒளிரும்கலா
வயிரவி, மண்டலி, மாலினி, சூலி வராகி என்றே
செயிரவி நான்மறை சேர்திருநாமங்கள் செப்புவரே.

செப்பும், கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராமவல்லி! அணிதிரளக்
கொப்பும், வயிரக் குழையும், விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத்தேன்என் துணைவிழிக்கே.

விழிக்கே அருளுண்டு; அபிராமவல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு; எமக்கு அவ்வழி கிடக்கப்
பழிக்கே சுழன்று எம் பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டினியே.

கூட்டியவா! என்னைத் தன் அடியாரில் கொடியவினை
ஓட்டியவா! எண்கண் ஓடியவா! தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா! கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா!
ஆட்டியவா நடம் ஆடகத்தாமரை ஆரணங்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணங்கே! அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன்; ஒருவரை வாழ்த்துகிலேன்; நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன்; அறிவொன்றிலேன் எண்கண் நீவைத்த பேரளியே.

அளியார் கமலத்தில் ஆரணங்கே! அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திருமேனியை உள்ளுதொறும்
களியாகி, அந்தக்கரணங்கள் விம்மி, கரைபுரண்டு,
வெளியாய்விடின், எங்ஙனே மறப்பேன் நின்விரகினையேன்.

விரவும் புதுமலர் இட்டு நின்பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்ச வல்லார், இமையோர் எவரும்
பரவும் பதமும், அயிராவதமும், பகீரதீயும்
உரவும் குலிசமும், கற்பகக் காவும் உடையவரே.

உடையாளை, ஒல்கு செம்பட்டு உடையாளை; ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடையாளை, தயங்குநுண்ணூல்
இடையாளை, எங்கள்பெம்மான் இடையாளை, இங்கு என்னை இனிப்
படையாளை, உங்களையும் படையாவண்ணம் பார்த்திருமே.

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும், பனிச்சிறை வண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும், கரும்பும் என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும்,
வார்க்குங்கும முலையும், முலைமேல் முத்துமாலையுமே.

மாலயன் தேட, மறைதேட, வானவர் தேட, நின்ற
காலையும், சூடகக் கையையும், கொண்டு, கதித்தகப்பு
வேலை வெங்காலன் என்மேல் விடும்போது வெளிநில்கண்டாய்;
பாலையும் தேனையும், பாகையும் போலும் பணிமொழியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிக்கும், நினைவுக்கும் எட்டாத நின் திருமூர்த்தி என்தன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால்! விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படி ஒருபாகம் கொண்டாளும் பராபரையே.

பரம் என்று உனை அடைந்தேன் தமியேனும்; உன் பக்தருக்குள்
தரம் அன்று இவன்என்று தள்ளத்தகாது; தரியலர் தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில்வாங்கிய போதில் அயன்
சிரம் ஒன்று செற்ற கையான் இடப்பாகம் சிறந்தவளே!

சிறக்கும் கமலத் திருவே! நின்சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும், நின் துணைவரும் நீயும் துரியம் அற்ற
உறக்கம் தரவந்து உடம்போடு உயிர் <உறவற்ற, அறிவு
மறக்கும் பொழுது, என்முன்னே வரல்வேண்டும் வருந்தியுமே.

வருந்தா வகைஎன் மனத்தாமரையினில் வந்துபுதுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனிஎனக்குப்
பொருந்தாது ஒருபொருள் இல்லை; விண்மேவும் புலவருக்கு
விருந்தாக, வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே.

மெல்லிய நுண் இடைமின் அனையாளை, விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன் அனையாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடியாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம்தருமே.

பதத்தே உருகி, நின்பாதத்திலே மனம் பற்றி, உன்தன்
இதத்தே ஒழுக அடிமைகொண்டாய்; இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங்கேன்; அவர் போன வழியும் செல்லேன்;
முதல்தேவர் மூவரும், யாவரும் போற்றும் முகிழ்நகையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகையே இஃதிந்த ஞாலம் எல்லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை; மானே முதுகண்; முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது; நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

விரும்பித் தொழும் அடியார், விழிநீர்மல்கி மெய்புளகம்
அரும்பி, ததும்பிய ஆனந்தமாகி; அறிவிழந்து,
சுரும்பிற் களித்து மொழி தடுமாறி, முன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென்றால், அபிராமி சமயம் நன்றே.

நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது
ஒன்றேயும் இல்லை; உனக்கே பரம் எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனதென்று அளித்து விட்டேன்; அழியாத குணக்
குன்றே! அருட்கடலே! இமவான் பெற்ற கோமளமே!

கோமள வல்லியை அல்லியம் தாமரைக்கோயில் வைகும்
யாமள வல்லியை, ஏதம் இலாளை, எழுதரிய
சாமள மேனிச் சகலகலா மயில் தன்னைத் தம்மால்
ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே.

ஆதித்தன், அம்புலி, அங்கி, குபேரன், அமரர்தங்கோன்
போதிற் பிரமன், புராரி, முராரி, பொதியமுனி,
காதிப் பொருபடைக் கந்தன், கணபதி, காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.

தைவந்து நின்னடித் தாமரைசூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும், தலைவந்த ஆறும் கரந்தது எங்கே?
மெய்வந்த நெஞ்சில் அல்லால் ஒருகாலும் விரகர் தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புக அறியா மடப் பூங்குயிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயிலாய் இருக்கும் கடம்படாவியிடை; கோல இயல்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை; வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில்; கமலத்தின் மீது அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே.

குழையைத் தழுவிய ஒன்றை அம்தார் கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந்தோளும், கரும்புவில்லும்
விழையப்பொருதிறல்வேரி அம்பாணமும்; வெண்ணகையும்,
உழையப் பொருகண்ணும், நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றனவே.

**நூற்பயன்**

ஆத்தாளை, எங்கள் அபிராமவல்லியை, அண்டம் எல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூநிறத்தாளை, புவிஅடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும், கரும்பும், அங்கை
சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கு இல்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை ஓட்டம்

**ஸ்ரீ அம்மா பகவானின் பிரதம சிஷ்யை**
**பூஜய ஸ்ரீ ஆச்சாரிய சமதர்ஷிணி அவர்கள் வழங்கிய**
**ஆங்கில அருளுரை**
**"FLOW OF LIFE" தமிழாக்கம்**

*ஆன்மிகமானது அநேகமானோருக்கு எப்போது மலர்கின்றதெனில், அவர்கள் தமது வாழ்க்கையில் விளக்கமுடியாத அபூர்வமான தற்செயலான நிகழ்வுகள், மிகப்பெரிய அனுபவங்கள் அல்லது அவர்களின் வாழ்க்கையில் ஒரு பெரிய தாக்கம் ஏற்படும்பொழுது அதனால் பெருந்துயரம் ஏற்படும்போது இந்த வகையில் தான் மலரும். அப்போது அவர்கள் ஆன்மிக வழிக்குத் தள்ளப்படுகிறார்கள்.*

*மக்கள் தமது வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளைப் பற்றிச் சிந்தித்து தங்களுக்கு ஏன் அவ்வாறு கஷ்டங்கள் ஏற்படுகின்றன? அவற்றின் தீர்வுதான் என்ன? போன்ற கேள்விகளுக்கு தர்க்க ரீதியாகவும், காரண ரீதியாகவும் விடை கண்டுபிடிக்க முடியாத நிலையில், அவை பற்றிய விளக்கங்கள் தெளிவு பெறாத நிலையில் அவர்கள் தங்கள் உள்நோக்கிய பயணத்தில் மிக ஆழமான நிலையை அதாவது மூல நிலையைத் தேட ஆரம்பிக்கிறார்கள். இவர்களைத்தான் நான் ஆன்மிகமுள்ளவர்களாகக் கருதுகின்றேன்.*

*ஆன்மிக நிலையில் உள்ள ஒருவருக்கும் மத ஈடுபாடுடைய ஒருவருக்கும் பெரியளவில் வேறுபாடுகள் உள்ளன.*

*ஆனால் ஆன்மிக ஈடுபாடுடையவனோ சம்பிரதாயமாக வணங்கப்படும் இறைவனில் நம்பிக்கையற்றவனாகவும் இருப்பான். அவன் முற்றாக சமயபற்றற்றவனாக இருக்கலாம். ஆன்மிக நிலையில் உள்ளவன் வெளிநிலையிலிருந்து உள்நிலைக்கான பயணத்தை நாடி நிற்பான்.*

*ஒவ்வொரு சுகபோகமும் காலப்போக்கில் அதன் பெறுமானம் வலுவிழந்துவிடும் என்பதை உணர்வார்கள். இவர்கள் ஆழ்ந்து சிந்தித்து வாழ்க்கையைப் பற்றியும், அவர்களின் மனதின் போக்கை பற்றியும், வாழ்க்கை முறையைப் பற்றியும், தம்மை சுற்றியிருக்கும் உலக விவகாரங்கள் பற்றியும் விசாரணை செய்வார்கள். இவர்கள் உலகியல் வாழ்வில் இருந்து கொண்டு உலகத்தைப் பற்றிய இருட்டிற்குள் சென்று ஆராயமுறப்படுவார்கள். ஆனால் தங்கள் வாழ்க்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையைப் பற்றி உணர்ச்சிபூர்வமாக முற்றாக அறிய விரும்புவார்கள்.

மூன்றாவது வகையான மக்கள், அதாவது இறையியல்பை உணர்ந்து தெய்வீக வாழ்க்கை வாழ்பவர்கள். அவர்கள் இறை இயல்பைப் பற்றி அறிய வேண்டிய தமது தாகத்தைப் பூர்த்தி செய்து தெய்வீக வாழ்க்கை வாழ்பவர்கள். எல்லாவற்றையும் தாண்டிச் சென்ற நிலையில் மேலான அனுபவங்களைப் பெற்றவர்கள். இவர்களுக்கு வாழ்க்கை என்பது முற்றாக தெய்வீகமானது.

இப்பொழுது நாங்கள் எங்களுக்குள் சென்று உள்நோக்கிப் பார்ப்போம். ஆழ்ந்து சிந்தித்து இதனை நோக்குவோம். அதாவது எங்களுடைய மனத்தையே நாங்கள் பார்ப்போம். புத்தகங்களைப் படித்தும் பிரசாரங்களை கேட்டும் அறிவைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் ஞானமும் ஒளியும், நீ உன்னை உள்நோக்கிப் பார்ப்பதாலும் உனது மனதை நீயே நோக்குவதாலும், உனது நிலையை நோக்குவதாலும் உனது இதயத்தைப் பார்ப்பதாலுமே பெறப்படக் கூடியன. எமது வாழ்வு பெரும்பான்மையாக உறவுமுறையை அடிப்படையாகக் கொண்டது. இரு தேவைகளைக் கொண்டு பண்படுத்தப்பட்ட உறவுமுறையைக் கொண்டதே பெரும்பாலான வாழ்க்கை அவையாவன.

1. அன்புறவை ஒருவர் மேல் வெளிப்படுத்தும் தேவை.

2. அன்பை நாடி நிற்கும் தேவை.

இந்த இரண்டாவது வகையானது அன்பு நிபந்தனையற்ற முறையிலும் உணர்ச்சிபூர்வமாகவும் ஆர்வத்துடனும் அளிக்கப்படும் அன்பு ஆகும்.

எங்கள் வாழ்க்கையில் எமது செயல்களும் அதன் பெறுபேறுகளும் இவ்விரு அடிப்படைத் தேவைகளையும் பூர்த்திசெய்வதை அடிப்படை யாகக் கொண்டவையே. அதாவது அதன் பொருள் அறிவு, பதவிநிலை போன்றவையாகவும் இவ்விரு தேவைகளையும் பூர்த்தி செய்வதற்குரிய னவாகவும் இருக்கும்.

நாங்கள் முதலில் அன்பை நாடி நிற்கும் தேவையைப் பார்ப்போம். நான் பேசும்போது நீங்கள் உங்களினுள்ளே சென்று இரண்டாவது நிலைப் பாட்டைப் பாருங்கள். அதாவது அன்பை நாடி நிற்கும் தேவையை.

நீ உன்னைப் பற்றிய நிலையை நோக்கிய நாளிலிருந்து உன்னை ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் நேசிப்பதை நாடி நிற்கிறாய். அதாவது உன்னை அன்புடன் நேசிக்கும் ஒருவரை தேடுகிறாய். ஏதிர்பார்க்கிறாய்.. நிபந்தனையற்ற முறையில் உன்னை அன்புடன் நேசிக்கும் ஒருவரை நாடி நிற்கிறாய். உனது குறைபாடுகள் எப்படி இருந்தால் என்ன? அதாவது அழகு, குணம், பதவி போன்ற நிலைகளில் என்னென்ன வேறுபாடுகள் இருந்தாலென்ன? இவை எல்லாவற்றையும் தள்ளிவிட்டு அன்பை நாடி நிற்கிறாய்.

இந்த அன்பை நாடி நிற்கும் வேட்கை, முதன் முதலில் எம்மை இந்த பூமிக்கு கொண்டு வந்த தாயிடம் செல்கிறது. தாய் தந்தையிடம் ஆரம்பித்து. அவர்களின் முற்றான அன்பை எதிர்பார்த்து, அவர்கள் உன்னை தமது கண்ணின் மணிபோல் நேசிப்பதை எதிர்பார்க்கிறாய். அவர்கள் உன்னை மட்டுமே நேசிக்க வேண்டும் என நீ எதிர்பார்க்கிறாய். இது சாத்தியப்படாது போகிறது. இந்த நிலையில் நீ வேறு இடங்களை, அதாவது உன்மீது உணர்ச்சிபூர்வமான அன்பைச் செலுத்தக் கூடியவர்களை நாடிச் செல்கிறாய். பாடசாலைக்குச் செல்கிறாய். அங்கு ஒரு நண்பனைப் பெற்று, அவன் உன்மீது முற்றாக அன்பு செலுத்தும் நிலையை எதிர்பார்த்து நாடி நிற்கிறாய். அதன்பின் ஆசிரியரை நாடிச்சென்று அங்கும் உனது தேடுதல் நிறைவு பெறாத நிலையை உணர்கிறாய்.

அதன்பின் உனது வாழ்க்கைத் துணையிடமும், பிள்ளைளிடமும் பின்னர் பேரப்பிள்ளைகளிடமும் இந்த அன்பை எதிர்பாக்கிறாய். உனது அன்பைத் தேடும் வேட்டை இப்படியே தொடர்கிறது. ஆனால் அன்பைத் தேடும் வேட்டையில் அவர்களது தேவைக்கேற்ப அது கிடைத்தற்கரியதாக இருக்கிறது. ஏவ்வறா யிருப்பினும் குறிப்பிட்ட ஒரு உறவு முறையில் அந்த அன்பைப் பெற்ற உணர்வில் அந்த அன்பு தொடருமென்றும், நிலைத்திருக்கும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

ஒருவனுக்கு தான் அழகாய், அறிவாளியாக, செல்வந்தனாக இருக்க வேண்டும் என்ற ஆசைகள் உண்டாகும். இவையெல்லாம் உண்மையில் அன்பை வேண்டி நிற்கும் நிலைப்பாடுடையனவே.

நீ அழகாக இருக்க விரும்புவதன் காரணம், உன்னிடம் பலர் அன்பு செலுத்த வேண்டும் என்பதேயாகும். நீ செல்வந்தனாய் இருப்பின் உனது மனைவியும் பிள்ளைகளும் உன்மீது அதிக அன்பை செலுத்துவார்கள். உனது மனைவி சந்தோஷப்பட்டு உன்மீது அதிகஅன்பை செலுத்துவாள். நீ அறிவாளியாக இருப்பின் உனது பெற்றோர் உன்னை கூடுதலாக மதிப்பார்கள், நேசிக்கப்பார்கள். உனது சதோதரர் சகோதரியைவிட பெற்றோர் உன்மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுதல் அன்பைச் செலுத்துவர். இவையெல்லாம் அன்பை வேண்டி நிற்ற லின் அடிப்படையில் உருவானவையே! அதாவது நேசிக்கப்படுபவரை வேண்டி நிற்றலாகும். உனது வாழ்க்கையின் ஓட்டத்தைப் பார்க்கும்போது இவ்வுலகில் யாருமே நிபந்தனையற்ற அன்புடன் நேசிக்கப்படவில்லை என நீ உணர்கிறாய். இவ்வுலகில் ஒருவர்கூட அவ்வனுபவத்தைப் பெற்றிருக்க மாட்டார்கள்.

ஏனெனில் எமது ஆழ்ந்த இதயத்தில் பெரிய வெற்றிடம் இருக்கின்றது. உன்னை எல்லோரும் அன்புடன் நேசித்தார்கள் என்பதை நீ நம்ப மறுக்கிறாய். அளவிடமுடியாத எவ்வளவு அன்பை அள்ளிக் கொட்டினாலும் இது உன்னை திருப்திப்படுத்த முடியாதென நீ உணர்கிறாய். அதாவது ஒரு வெற்றிடம். அன்பைப் பற்றியதொரு பயம் அப்படியே பல விதமான நிலைகள் உனக்கு ஏற்படுகின்றன.

இப்பொழுது அன்புறவை ஒருவர்மேல் வெளிப்படுத்தும் தேவையைப் பார்ப்போம். உனது வாழ்க்கையின் ஓட்டத்தைப் பார்க்குமிடத்து, உறவு முறை யில் பல நிலைப்பாடுகள் உனது விதிக்கு காரணமென்பதை உணர்கிறாய். இந்த உறவுமுறை உன்னால் ஏற்பட்டதல்ல அல்லது நீ அதற்கு காரணமல்ல. உனது தாய், தந்தை, சகோதரர்களை நீ தெரிவு செய்யவில்லை. ஆனால் வேறுசில உறவுகளை நீயே தெரிவு செய்துள்ளாய். உனது வாழ்க்கைத் துணை, தொழில் பங்கீட்டாளர், உனது நண்பன், ஆன்மிக குரு யாவரும் நீ தெரிவு செய்வதையே இந்த உறவுமுறையில் ஒரு விசித்திரமான அசௌகரியத்தை காணக் கூடியதாக உள்ளது. அந்த அசௌகரியம் உனது சுயநலத்தால் உருவா னதென எப்பொழுதாவது நீ உணர்வாய். நாங்கள் மற்றவர்களை எங்கள் சுயநலத்திற்காக பயன்படுத்துவோம். ஒரு தாய் தனது குழந்தை வளர்ந்து பெரியதொரு வைத்தியராகவோ, பொறியியலாளராகவோ அல்லது பெரிய தொரு இசைக் கலைஞராகவோ அல்லது பெரியதொரு நடனக் கலைஞனாகவோ உருவாக வேண்டும் என விரும்புகிறாள்.

அது அவளது சுயவிருப்பைப் பூர்த்தி செய்வதற்காகவேயாகும். இவ்வாறு எங்கள் தேவைகள் சுயநலத்தின் அடிப்படையிலேயே அதாவது நாங்கள் எங் கள் வாழ்க்கையில் எதனை அடையமுடியவில்லையோ அதை எங்கள் பிள்ளை களாவது அடையவேண்டும் என்ற அங்கலாய்ப்பில் குடும்ப கௌரவத்தை வேண்டிச் செயற்படுகின்றோம். நாங்கள் எங்கள் சுய கௌரவத்திற்காக வேறொருவரைப் பயன்படுத்துகின்றோம் என்றுணராதவராக வாழ்கிறோம். எங்கள் பிள்ளை சந்தோஷமாக வாழவேண்டும் என்ற உணர்வு ஒரு பகுதி யிலிருப்பினும், உள்ளத்தினடிப்படையில் எங்கள் பெருமை நாட்டமே இதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குக் காரணம். அதாவது எங்கள் பிள்ளை எங்களுக்கு புகழ் சேர்ப்பான் என்ற அவாவே ஆகும். இதை நீங்கள் ஏற்க மறுத்தாலும் ஆழமாக உங்களின உள்ளே நீங்கள் உணர்கிறீர்கள். நாங்கள் எங்கள் உறவுமுறையில் சுயநலமாக இருக்கிறோம் என்பதை உணர்கிறோம். அதனால் எங்கள் சுயநலத்திற்காக அவர்களைப் பயன்படுத்துகின்றோம் எனவும் அறிகிறோம்.

ஏன் ஒவ்வொரு உறவுமுறையிலும் சில காலத்தின்பின் சலிப்புத் தன்மை ஏற்படுகின்றது? சில காலத்தின் பின் ஒவ்வொருவரும் ஏன் இவ்வாறு நடக் கிறார்கள்? அன்புறவை ஒருவர்மீது வெளிப்படுத்தும் தேவை கூட 10 ஆண் டுகள், 20 ஆண்டுகள், 30 ஆண்டுகள் என காலம் ஓடியும் நிறைவேறாத நிலை யில் உள்ளது.

இவ்விரு தேவைகளும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் எமது வாழ்க் கையின் ஓட்டம் அமைந்துள்ளது. இதற்கு என் செய்ய முடியும்? என்று சிந்திப்போம். நிபந்தனையற்ற அன்பை ஏற்படுத்த நாங்கள் எதுவும் செய் யமுடியுமா? அதாவது "நான் இன்று தொடக்கம் ஒருவர் மீது முற்றாக அன்பைசெலுத்த முயற்சிப்பேன்என்ன்று நீங்கள் உங்களுக்குள் தீர்மானம் எடுப்பின் இதை நடைமுறைப்படுத்துவது சாத்தியமா? அல்லது இன்று தொடக்கம் நான் அன்பைப் பயிற்சி செய்ய போகிறேன் என்றால் அது சாத்தியமா? சாத்தியமாக முடியாது.

பயிற்சி முறையில் அல்லது விருத்தி செய்தல் முறையில் அன்பை ஏற்படுத்த முடியாது. அது உங்கள் எண்ணத்தாலும், உணர்ச்சியாலும் ஏற்படுத்தப்பட்ட நிலைப்பாடே. இதயத்தில் ஏற்பட்டதல்ல. இதனை ஞாபகத்தில் வைத் துக்கொள்ளுங்கள்.

மன்னித்தல் என்பது கொள்கை ரீதியாகவும் சமாதானம் என்பது இலட்சிய ரீதியாகவும் அன்பு என்பது விருத்தி செய்யும் வகையிலும் ஏற்படுத்த முடியும் என்பது வாழ்க்கையில் ஒரு சாத்தியமற்ற நிலையே. இவைகளை நிறைவேற்ற ஆன்மிக சாதனையே ஒரேவழி. இந்த உண்மை ஏற்படும்போது சடுதியான அன்பைப் பற்றிய அனுபவம் அல்லது பெருவேகம் அல்லது இதய மலர்ச்சி ஏற்படுகிறது. இது உங்களுக்கு ஏற்பட வேண்டும்.

கல்கி தர்மம் இந்த நிகழ்வை உங்களுக்கு உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத் துகின்றது. அதாவது இதய மலர்வு, அன்புப் பெருவேகம், அன்பு அனுபவம் யாவற்றையும் கல்கி தருமத்தின் அடிப்படையில் உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்த முடியும். அன்பைக் கண்டு பிடிப்பதும், இதயத்தை மலரச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதும் கல்கி தருமத்தின் போதனை மூலம் சாதிக்கப்படுவதல்ல. கல்கி தர்மம் அன்பை உங்கள் வாழ்க்கையில் ஒரு நிகழ்வாக ஏற்படுத்துகிறது. உங்களுடைய சுய நிலையைப் பற்றிய உணர்வை முற்றாக நீங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். இது தான் முதலாவது படி. இரண்டாவது கல்கி பூஜா, கல்கியக்னா போன்றவற்றில் பங்குகொள்ளல், இவை யாவும் கல்கி தாசர்களால் நடத்தப்படும் ஆன்மிக சாதனை வகுப்புக்களே.

இந்த சாதனைகள் உங்கள் ஆழ்ந்த நிலையை உங்களுக்கு உணரவைத்து, அந்தர்யாமினில் இறைவனைக் காணும் நிலைப்பாட்டை அளிக்கிறது. அப்பொழுதுதான் நீங்கள் இவ்வன்பை, அன்பின் உட்பொருளை கண்டுபிடிக்கிறீர்கள். தயவுசெய்து வாழ்க்கை என்பது ஒரு பள்ளிக்கூடம் என்பதை உணருங்கள். இப்பளிக்கூடத்தில் எத்தனையோ பாடங்களை கற்கிறீர்கள்.

அன்பு என்பது ஒரு இலட்சியமல்ல. அதை பயிற்சி செய்தும் பெற முடியாது. உங்களுக்குள் நீங்கள் கண்டுபிடிக்க வேண்டியது. உங்களுக்குள் எத்தனையோ தெய்வீக அனுபவங்கள் ஏற்படுகின்றன. இவ்வன்பை உணரும் போதுதான் நீங்கள் உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

அண்மையில் ஒரு பெண்மணி ஒரு யக்னாவில் பங்குபற்றினார். அவர் கவலையில் ஆழ்ந்திருந்தார். கடந்த ஏழு வருடங்கள் பெரிய அளவில் சத்திரசிகிச்சைக்கு உள்ளாகியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து உடல் தேறலை நாடி நின்றார். ஏன் யக்னாக்கு வந்தாரெனில், தனக்கேற்பட்ட நோயைவிட தனது மகள் கடந்த மூன்றாண்டுகளாக மூளையில் கட்டி ஏற்பட்டு. புற்றுநோயினால் அவதியுற்றதைக் கண்டு கவலைப்பட்ட நிலையில் அக்கவலையைத் தீர்பதற்காக யக்னாவிற்கு வந்தார். அந்தப் பெண்ணுக்கும் இரண்டு சத்திரசிகிச்சை ஏற்பட்டு ஒரு கண் பார்வையை இழந்தார். தாயின் துன்பத்தை உணரமுடியாது இருந்தார். (3 வருடம் பலமுயற்சிகள் எடுத்தும் மீளமுடியாது இறுதியாக கல்கி தர்மத்தை நாடி வந்தார்) அவள் என்னை மன அவஸ்த்தைக்கு உள்ளாக்கியிருந்தாள். இறுதியாக பகவானிடம் கேட்பது என்னவென்றால் " அவளுக்கு நோய் நிவாரணம் கொடுங்கள் அல்லது அவளை எடுத்துக்காள்ளுங்கள்" எனக் கூறினார். இதைக் கேட்டுக் கொண்டு சாய்வு நாற்காலியில் இருந்த மகள் ஏளனச் சிரிப்பு சிரித்தாள். நான் சொன்னேன் " நீ யக்னாவில் பங்குபற்று" அதற்கு அப்பெண்மணி கூறினாள் "எனது சிறுநீரகங்கள் சீர் கெட்ட நிலையில் உள்ளன" என வைத்தியர் கூறியுள்ளார். நான் இப்போது வாழ்க்கையைப் பயந்து எண்ணிக் கொண் டிருக்கிறேன் என விடையளித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது வேண்டுகோளின் பிரகாரம் யக்னாவில் பங்கு பற்றினார். பின்னர் எங்கள் யக்னாவில் பங்குபற்றி, தனது கடந்த கால வாழ்க்கையை முற்றாகக் கண்டு கொண்டார். அவர் அது தெய்வீக ஒப்பந்தம் என்பதை கண்டு பிடித்தார். அவள் வீட்டுக்கு சென்றபோது மகள் கட்டிலில் ஆழ்ந்த நித்திரையில் இருப் பதைக் கண்டார். அவள் தனது மகள் தன்னிலிருந்து பிரிந்த நிலையில் இல்லை என்பதை சடுதியாக உணர்ந்தார். தனது உடம்பில் நீட்டப்பட்ட ஒரு பகுதியே மகள் எனக் கண்டார். முதன்முதலில் ஒரு பேரன்பு அவளிடமிருந்து வெளிப்பட்டது. தனது மகளிடம் சென்று அவளது நெற்றியில் முத்தமிட்டார். அன்றிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் அவளுடைய மகள் இறந்தாள். தாய்க்கும் மகளுக்கும் இடையேயுள்ள உறவு பேரன்பானது. அந்த ஒரு மாதத்தினுள் வாழ்க்கையின் பயணம் முற்றுப்பெற்ற நிலை ஏற்பட்டது. அந்த மகள் அமைதியாக இவ்வுலகை நீத்தாள். அவர் தனது மகளுடனான அன்பைக் கண்டு பிடித்தார். பின் தனது சிறுநீரக நோய் பற்றி வேண்டி நிற்க விதியிருந்தும் அவளுடைய மகளுக்காகவே யக்னாவில் பங்கு பற்றினார். ஆனாலும் அவளு டைய சிறுநீரங்களின் நிலை சீரடைந்தது.

உங்கள் வாழ்க்கை என்பது ஒரு பள்ளிக்கூடம். அதில் பெறும் அனுபவங்கள் யாவும் பாடங்கள் என்று உணருங்கள். அன்பைக் கண்டுபிடிக்காத வாழ்க்கை அழுக்கு, சேறு தேங்கி நிற்கும் நீர்க்குட்டை போன்றது. அன்பைக் கண்டு பிடிக்கும் நிலை உங்களுக்கு ஏற்படுமாயின் அது ஒரு ஓட்டம். ஓட்டம் எதற்காகவெனில், தொடங்க முடியாத ஒன்றைத் தொடங்குவதற்கான ஓட் டம், முடிக்கமுடியாதொன்றை முடிப்பதற்கான ஓட்டம். இது ஒரு உள் ளார்ந்த இயக்கம். நான் உங்கள் ஒவ்வொருவரையும் அழைக்கிறேன். அன்பு செலுத்துவதற்கும் இவ்வாழ்வில் ஓட்டத்துக்கு உற்சாகமாகப் பங்கு பற்றி, ஏன் பிறந்தீர்கள் எனவும் எப்படி உங்களுக்கு நிகழ்கால வாழ்க்கை இருக்கிறது எனக் கண்டுபிடிக்கவும் பேரன்பையும் பெரிய சுதத்திரத்தையும் நிரந்தரமான சுதந்திரத்தையும் தேடுவதற்கும் உங்களை அழைக் கின்றேன். இதுவே உள்ளார்ந்த மனதின் இயக்கமாகும். இலக்கு என்பது முழுமையான விடுதலையாகவும், மனிதனின் விடுதலை என்பது எல்லாவி தமான துன்பங்கலிருந்தும் விடுதலை பெறுதல், அதாவது உடல், உள ஆன்மிக ரீதி யாக துயரங்களில் இருந்து விடுபடுவதாகும்.

இப்பொழுது நான் எனது அடிகளை முன்னெடுத்து செல்ல விரும்புகிறேன். நீங்களும் அங்ஙனமே சில அடிகளை முன்னெடுத்து செல்வதை விரும்பு கிறேன். நீங்களும் எடுத்துக் செல்லும் அடிகள் இறைவனின் தெய்வீக கமலத் துள் ஆகட்டும். அதாவது கல்கியின் இதயக் கமலத்துள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு என்றால் என்ன?

**ஒவ்வொரு மனிதனின் குருதியிலும் குறிப்பிட்ட அளவு குளுக்கோஸ் உள்ளது. குளுக்கோஸின் அளவு வழமைக்கு மாறாக உயர்வடைகின்ற நிலைமையே நீரிழிவு எனக் கூறப்படும்.**

***சாதாரண அளவு***

***FBS = 60 - 110 mg/dl*** *(10 மணித்தியாலங்கள் உணவு உட்கொள்ளாமல் இருந்த பின்னர் பரிசோதிக்கப்பட்ட குருதியில் குளுக்கோஸின் அளவு)*

***PPBS = 80 - 140 mg/dl*** *(உணவு உட்கொண்டு 2 மணித்தியாலங்களின் பின்னர் பரீட்சிக்கப்பட்ட குருதியில் குளுக்கோஸின் அளவு)*

## அறிமுகம்

**குருதிக்கு எவ்வாறு குளுக்கோஸ் கிடைக்கின்றது ?**

நாம் உட்கொள்ளும் உணவு சமிபாடடைந்த பின்னர் குளுக்கோஸ் என்னும் பதார்த்தமாக மாறி குருதியுடன் சேர்கின்றது .

**குளுக்கோஸ் எமக்குத் தேவைப்படுவது ஏன்?**

எமக்குத் தேவையான சக்தி குளுக்கோஸ் மூலமே கிடைக்கின்றது. குருதியில் உள்ள குளுக்கோஸ் எமது உடலில் உள்ள அனைத்துக் கலங்களையும் சென்றடைகின்றது.

**குருதியில் குளுக்கோஸின் மட்டம் அதிகரிப்பது ஏன்?**

இந்தக் குளுக்கோசானது குருதியின் ஊடாக கலங்களுக்குள் நுழைவதற்கு இன்சுலின் தேவைப்படுகின்றது. நுண் செல்களில் காணப்படுகின்ற நுழை வாயில்களின் ஊடாகவே குளுக்கோஸ் அதனுள் சென்றடைகின்றது. ஆகவே இந்த நுழை வாயில்களைத் திறப்பதற்கான திறவுகோலாக இன்சுலின் தொழிற்படுகின்றது. அந்தத் தொழிற்பாட்டிற்குத் தேவையான இன்சுலின் இல்லா விட்டால் செல்களுக்குள் இன்சுலின் சென்றடைய மாட்டாது என்பதுடன், குருதியில் குளுக்கோசு மட்டம் அதிகரிக்கின்றது.

**நீரிழிவு நோயின் அறிகுறிகள் எவை?**

குருதியில் குளுக்கோசு மட்டம் அதிகரிக்கின்றமையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பகல் - இரவு இரண்டு வேளைகளிலும் வெளியேறும் சிறுநீரின் அளவு அதிகரிக்கும்.
2. அதிக தாகம் ஏற்படும்.

செல்களுக்குக்கு குளுக்கோசு கிடைக்காமையால், சோர்வு, உடல் வலுவின்மை, அடிக் கடி பசி ஏற்படுதல், நித்திரை, உடல் மெலிவடை தல்ஆகிய அறிகுறிகள் ஏற்படும்.

சில சந்தர்ப்பங்களில் இத்தகைய நோய் அறிகுறிகள் இல்லாவிட்டா லும் நீரிழிவு ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ளது. குடும்பத்தில் நீரிழிவு நோயாளர்கள் இருப்பின் குருதியில் குளுக்கோசு மட்டத்தைப் பரிசோதிப் பது சிறந்ததாகும்.

**நீரிழிவு நோயில் வகைகள் உள்ளனவா?**
ஆம் மூன்று வகைகள் உள்ளன.

**முதலாவது வகை (*Type-1*)**
இதன்போது இன்சுலின் சுரக்கும் தன்மையில் குறைவு அல்லது இன்சு லின் சுரக்காத நிலை காணப்படும். பெரும்பாலும் சிறுவர்களுக்கு அல்லது இளையோருக்கு இந்த நிலைமை ஏற்படும். இதற்காக வெளியில் இருந்து இன்சுலின் புகுத்தவேண்டிய நிலைமை உள்ளது.

**இரண்டாவது வகை (*Type-2*)**
இன்சுலின் காணப்பட்ட போதிலும், செல்கள் அவற்றைப் பயன்படுத் தாத தன்மையாகும். உணவுக் கட்டுப்பாடு அல்லது மருந்துகள் மூலம் இதற்கு சிகிச்சை பெறமுடியும் என்பதுடன், சில சந்தர்ப்பங்களில் வெளிப்புறமாக இன்சுலினைப் புகுத் தவேண்டியது அவசியமாகின்றது.

**கர்ப்ப காலத்தில் ஏற்படுகின்ற நீரிழிவு**
- கர்ப்பகாலத்தில் குருதியில் உள்ள குளுக்கோஸின் மட்டம் அதிக ரிக்கக் கூடும். (*Gestational Diabetes*)
- பிரசவத்தின் பின்னரும் குருதியில் குளுக்கோஸின் மட்டம் அதிக ரிக்கலாம். இதனால் எதிர்காலத்தில் நீரிழிவு ஏற்படுவதற்கு அது காரணமாக அமையலாம்.

**குருதியில் குளுக்கோஸின் மட்டத்தை கட்டுப்படுத்தவேண்டியதன் அவசியம் என்ன?**
குருதியில் குளுக்கோஸின் மட்டம் அதிகரிப்பதால் உங்களது ஹோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோன்களுக்கு பாதிப்பு ஏற்படலாம். இந்த இடைநிலைப் பாதிப்பானது குறுங்கால அல்லது நீண்டகாலப்பாதிப்பாக இருக்கலாம்.

**குறுங்காலப் பாதிப்புக்கள் எவை?**

ஞாபக மாற்றங்கள், உலர்தன்மை உட்பட பல்வேறு பாதிப்புக்களுக்கு இலக்காகக் கூடிய ஆபத்து காணப்படுகின்றது.

**குறை குளுக்கோசு மட்டம் காணப்படுவதால் ஏற்படும் நீண்ட காலத் தாக்கங்கள் எவை?**

இருதயம் - நெஞ்சு வலி, பாதங்களுக்கு வலுவற்ற குருதி பாய்ச்சப்ப டுதல்.
நரம்புக் கட்டமைப்பு - கால்கள் மரத்துப்போதல், காயங்கள் ஏற்பட்டால் அதுகுறித்துக் கவனக் குறைவாக இருந்தால் கால்களை வெட்டி நீக்க வேண்டிய நிலைமை ஏற்படுதல்.
கண் - வெண் படலம் தோன்றுதல், பார்வை இழத்தல்.
சிறுநீரகம் - சிறுநீர்க் கடுப்பு, சிறுநீரகங்கள் செயலிழத்தல்.

**இந்தப் பாதிப்புக்கள் ஏற்படுவதைத் தடுப்பது எவ்வாறு?**

- குருதியில் சிறந்த **குளுக்கோசு** மட்டத்தைப் பேணுதல்
- உயர் குருதி அழுத்ததால்ப் பாதிக்கப்பட்டிருப்பின் குருதி அழுத் தத்தை சிறந்த மட்டத்தில்ப் பேணுதல்.
- குருதியில் உள்ள கொலஸ்ரோல் மட்டத்தைப் பேணுதல்.
- புகைத்தலைத் தவிர்த்தல்.
- முறையான உடற்பயிற்சி மற்றும் நடைமுறை ரீதியான வாழ்க் கையை முன்னெடுத்தல்.
- உணவுக் கட்டுப்பாடு மற்றும் உடற் பயிற்சியுடன் உயரத்திற்கு ஏற்ற உடல் எடையைப் பேணுதல்.

முறையாக சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் வருடாந்தம் குறைபா டுகள் தொடர்பில் உடற்பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலம் நீரிழிவைக் கட்டுப்படுத்த முடியும்.

நீரிழிவு எப்போதும் ஒரே நிலைமையிற் காணப்படுவதில்லை. காலப் போக்கில் அது உக்கிரமடையும்.

**அதனால் சிறந்த வாழ்க்கை முறைமையை முன்னெடுத்தல் அவசியமாகும். எனவே,**

1. சிறந்த உணவுப் பழக்கவழக்கத்தைக் கடைப்பிடித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. உடற்பயிற்சி
3. சிறந்த மனநிலையைப் பேணுதல் அவசியமாகும்.

**குருதியில் குளுக்கோஸின் அளவு சரியாக பேணப்படாமைக்கான காரணங்கள்.**

1. உணவுக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்காமை.
2. முறையாக மருந்துகளை உட்கொள்ளாமை (வில்லை அல்லது இன்சுலின்)
3. தொடர்ச்சியாக உடற்பயிற்சியில் ஈடுபடாமை.
4. நோய் அல்லது பாதிப்புக்கு இலக்காகின்ற சந்தர்ப்பங்களில் தமது குருதியில் உள்ள குளுக்கோஸின் மட்டம் குறித்து கவனம் செலுத்தாமை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்சுலின் செலுத்துவதற்கான பல்வேறு முறைகள்

**முன்பே நிரப்பப்பட்ட இன்சுலின் பேனா** – இது ஒரு நீரூற்று பேனாவில் ஒரு மை பொதியுறை போலவே உள்ளது. இன்சுலின் கெட்டிரெஜ் ஒரு சிறிய பேனா அளவிலான சாதனத்தின் மூலம் பிடித்துக் கொள்ளப்படுகிறது.விநியோகிப் பதற்கு தேவையான அளவு இன்சுலின் அலகுகள், பேனாவைக் கீழே திருப்பி அதன் மூலம் எண் அளவை பார்க்கும் சாளரத்தில் தெரியும் வரை ஊசி போட வேண்டும். பேனாவின் முனை ஒரு ஊசியைக் கொணடுள்ளது, இது ஒவ்வொரு முறை ஊசி போட்ட பின்பும் அகற்றப்படுகிறது.

**இன்சுலின் உந்திகள் (பம்ப்)** – இந்த இன்சுலின் விநியோகம் மிக சமீபத்தில் கிடைக்கக் கூடிய முன்னேற்றமாகும். இது இன்சுலின் கெட்டிரேஜை ஒத்த ஒரு பம்ப் நீர்த்தேக்கம், ஒரு பேட்டரியால் இயக்கப்படும் குழாய் மற்றும், இன்சுலின் சரியான அளவு வழங் கப்ப்டுவதைக் கட்டுப்படுத்த கணினி சிப் ஆகிய்வற்றால் ஆனது. பம்ப் தொடர்ந்து இன்சுலின் விநியோகிக்கப் பயன்படுத்தப்படு கிறது. இன்சுலின் அளவு திட்டமிடப்பட்ட ஒரு நிலையான விகிதத்தில் செலுத் தப்படுகிறது.

**உள்ளிழுப்புகள்** – இன்சுலின் உள்ளிழுக்கப்படும் படிவத்தை இந்த நாட்க ளில் அதிகம் பயன்படுத்துவதில்லை. இன்சுலின் உலர் பெட்டிகளில் தொகுக் கப்பட்டு ஒரு உள்ளிழுக்கும் சாதனத்துடன் செருகப்படும் இந்த சாதனம் இன்சு லினை ஒரு வாய் துண்டு உள்ள ஒரு அறையில் நுழைய அனுமதிக்கின்றது. இந்த வாய் துண்டு மூலம் பயனடைவோர் இன்சுலினை உள்ளிழுக்க முடியும்.

**புதிய மருந்தேற்றும் ஊசி சிம்லின்(ப்ரமிலின்டைடு)**

இன்சுலின் சிகிச்சை அளித்தும் போதுமான சர்க்கரை கட்டுப்பாடு அடைய முடியாமல் இருக்கும் நீரிழிவு நோயாளிகள் பயன் படுத்த ஊசியால் செலுத்தும் மருந்து.அமிலின் கணையம் செயற்கையாக சுரக்கும் ஹார்மோன் ஆகும் மற்றும் இது சாப்பாட்டிற்க்கு பிறகு குளுக்கோஸை கட்டுப்படுத்த் உதவுகிறது. இது நீரிழிவு நோயாளிகளுக்கு இல்லாமல் அல்லது குறைவாக இருக்கும். ப்ரமிலின்டைடு என்பது ஒரு செயற்கை வடிவ மனித அமிலினாகும்.இன் சுலினுடன் இதை உபயோகிக்கும் போது, சர்க்கரைக் கட்டுப்பாட்டை மேம் படுத்தும்.கிம்லின், சாப்பிட்ட பிறகு இரத்த சர்க்கரை உச்சங்களை குறைக்கிறது நாள் முழுவதும் குளுக்கோஸ் ஏற்ற இறக்கங்களைக் குறைக்கிறது மற்றும் முழுதான் உணர்வை அதிகரிக்கிறது (எடையிழப்பிற்கு வழி வகுக்கிறது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் Cancer

**புற்றுநோய் என்றால் என்ன?**

உடலுக்கு அடிப்படையாக உள்ள உயிரணுக்களைப் (செல்கள்) பாதிக் கும் நோயைத்தான் புற்றுநோய் என்கிறோம். இந்த நோய்பற்றி அறிந்துகொள் வதற்குமுன் இயல்பாக உள்ள உயிரணுக்கள் எவ்வாறு புற்றுநோய் அணுக் களாக மாறுகிறது என்று பார்ப்போம்!

நம் உடல் பலவகையான உயிரணுக்களால் ஆனது. உடல் வளர, ஆரோக் கியமாக இருக்க, இந்த உயிரணுக்கள் வளர்ந்து பெருகி, மேலும் பல உயிர ணுக்களை உருவாக்குகின்றன. இந்தச் சீரான பணியில் ஏதேனும் தவறு ஏற்ப டும்போது, புதிய உயிரணுக்கள் அதிகமாக உருவாகிவிடுகின்றன. பழைய உயிரணுக்கள் அவற்றின் கால அளவை மீறி உயிர் வாழ்ந்துவிடுகின்றன. இந்த அதிகப்படியான உயிரணுக்கள் உடலில் கட்டியாகத் தோன்றுகின்றன.

எல்லாக் கட்டிகளுமே புற்றுநோய்க் கட்டிகள் அல்ல. புற்றுநோய் அல்லாத கட்டிகளால் உயிருக்கு ஆபத்து இல்லை. இத்தகைய கட்டிகளை அறுவை சிகிச்சையின் மூலம் அகற்றினால் மீண்டும் தோன்றுவதில்லை; அவை உட லின் மற்ற பாகங்களுக்குப் பரவுவதில்லை.

சிகிச்சையற்ற நிலையில் புற்றுநோய் உயிரணுக்கள் கட்டுப்பாடின்றி வளர் கின்றன. அவை சுற்றியுள்ள மற்ற திசுக்களை ஆக்கிரமித்து அழிக்கின்றன. ரத் தம் மற்றும் நிணநீர் வழியாக உடலின் மற்ற பகுதிகளுக்கும் பரவுகின்றன. இத னால், உறுப்பின் இயக்கங்கள் பாதிக்கப்பட்டு இறப்பு ஏற்படுகிறது.

புற்றுநோய் ஒரு தொற்றுநோய் அல்ல. ஆண்களுக்கு நுரையீரல், வயிறு, குடல், உணவுக்குழாய், ப்ராஸ்ட்ரேட் சுரப்பிகளிலும், பெண்களுக்கு மார்பகம், நுரையீரல், வயிறு, குடல், கர்ப்பப்பை வாய் ஆகியவற்றிலும் அதிகமாக புற்றுநோய் வருகிறது. புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரிப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**புற்றுநோய்க்கு காரணம் என்ன?**

இதற்கு ஒரு குறிப்பிட்ட காரணி இல்லை. அடிப்படையாக உயிரணுக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி மற்றும் இறப்பைக் கட்டுப்படுத்தும் மரபணுக்களில் மாற்றங்கள் ஏற்பட்டு புற்றுநோயாகத் தோன்றுகிறது. புகையிலை உபயோகித்தல், உணவு முறைகள், சூரியனின் கதிர்வீச்சு, மாசு மற்றும் நச்சுத்தன்மையுடைய வேலை மற்றும்சுற்றுப்புறச்சூழ்நிலை, வாழ்க்கைமுறைஆகியவை இம்மாற்றத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இத்தகைய மரபணு மாற் றங்கள் பெற்றோர்களிடம் இருந்து பரம்பரையாகவும் வரலாம்.

சில வைரஸ்களும், புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பை அதிகரிக்கின்றன. உதாரணமாக எச்.ஐ.வி, ஹெபடைட்டிஸ் போன்றவை.

நெருங்கிய உறவினர்களுக்குப் புற்றுநோய் இருந்தால் மருத்துவரிடம் விபரம் தெரிவித்து புற்றுநோய் உங்களுக்கு வரும் வாய்ப்பு குறித்து கலந்தாலோசிக்கவும்.

**புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகள்:**

உடலில் புற்றுநோய் ஏற்படும் பாகத்தைப் பொறுத்து அறிகுறிகள் மாறு படும். கீழ்க்கண்ட அறிகுறிகள் புற்றுநோய் தவிர மற்ற நோய்களிலும் ஏற் படலாம். எனவே, இந்த அறிகுறிகள் இருந்தால், மருத்துவரை அணுகிப் பரி சோதித்துக்கொள்வது நல்லது.

- குரலில் திடீர் மாற்றம், தொடர் இருமல், குரலில் கரகரப்பு
- முழுங்குவதில் தொடர் சிரமம், தொண்டையில் அடைப்பு போல் தோன் றுதல்
- நாக்கை அசைப்பதில் சிரமம்
- மலம் அல்லது சிறுநீர் கழிக்கும் பழக்கத்தில் மாற்றம். (உதாரணம்: தொடர் மலச்சிக்கல் அல்லது வயிற்றுப் போக்கு) சிறுநீர் அல்லது மலத் தில் ரத்தம்.
- உடலில் கட்டி தோன்றுதல். புற்றுநோயில் ஆரம்ப கட்டத்தில் வலி ஏற்படுவதில்லை. பரவிய பிறகுதான் வலி ஏற்படும்.
- உடலில் உள்ள மச்சங்கள் அல்லது மருக்கள் பெரிதாகுதல், அல்லது அவற்றின் நிறத்தில் மாற்றம்
- காரணமில்லாமல் எடை குறைவு
- பெண்களுக்கு மார்பகங்களில் கட்டி, மாதவிடாயின் போது இயல்பை விட அதிக ரத்தப்போக்கு, இறுதி மாதவிடாய் (*post menopause*) நின்ற பிறகும் ரத்தப்போக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாயில் தோன்றும் புற்றுநோய்கள்

புகை மற்றும் புகையிலைப் பழக்கம் உள்ளவர்கள் மாதத்துக்கு ஒருமுறையாவது தாங்களே கண்ணாடியின் உதவியுடன் வாயைப் பரிசோதித்துக்கொள்வது நல்லது.

- ஆறாத புண்
- கட்டி, தடிப்பு
- ஈறு, நாக்கு மற்றும் வாயின் பிற பகுதிகள் வெள்ளை அல்லது சிவப்பு நிறமாகுதல்

### மார்பகப் புற்று நோய்கள்

பெண்கள் மார்பகங்களைச் சுய பரிசோதனை (மாதம் ஒரு முறை) செய்து கொள்வதன் மூலமும், மருத்துவர் மூலம் அவ்வப்போது பரிசோதனை செய்துகொள்வதன் மூலமும், மேமோகிராபி (*mammography*) மூலம் பரிசோதனை (40 வயதுக்கு மேற்பட்டோர் வருடத்துக்கு ஒரு முறை) செய்து கொள்வதன் மூலமும் மார்பகக் கட்டிகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் வாய்ப்பு அதிகரிக்கிறது.

### கர்ப்பப்பை வாய் புற்றுநோய்கள்

உடலுறவு ஆரம்பித்த மூன்று வருடங்களுக்குப் பிறகு கர்ப்பப்பையின் வாயிலில் வரும் புற்று-நோய்க்காக மருத்துவரை அணுகி *Pap Smear* செய்துகொள்வது நல்லது.

### புற்றுநோயைத் தடுக்க முடியுமா?

புற்றுநோயைத் தடுக்க உத்திரவாதமான முறை ஏதும் இல்லை. ஆனால், சரியான வாழ்க்கைமுறையின் மூலம் நோய் ஏற்படும் வாய்ப்பை பெருமளவில் குறைக்க முடியும்.

புகையிலைப் பொருட்களைப் (உதாரணம்: சிகரெட், பீடி, பான் வகைகள்) பயன்படுத்தாமை மது மற்றும் புகை பிடிக்கும் பழக்கம் ஒரு சேர இருப்பது தொண்டைப் புண்களின் வாய்ப்பை அதிகரிப்பதாக ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குறைந்த கொழுப்பு, அதிக காய்கறி, பழம், முழுமையான தானியங்கள் உட்கொள்ளுதல் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுவகைகளைத் தவிர்த் தல்
- உடல் பருமன் ஆகாமல் பார்த்துக்கொள்தல்.
- சருமத்தை வெயிலில் இருந்து பாதுகாத்தல். சூரியக்கதிர் தடுக்கும் களிம்பு (sunscreen lotion) பயன்படுத்துதல் மற்றும் இதற்காகத் தகுந்த உடையணிதல்.
- சுத்தமான சூழலில் இருத்தல்
- வைரஸ்களால் ஏற்படும் குறிப்பிட்ட புற்றுநோய்களை தடுப்பூசி மூலம் தடுக்கலாம்.

## புற்றுநோயும் வலியும்

புற்றுநோய் என்றால் அதிக வலி தரும் நோய் என்று பரவலான கருத்தும் பயமும் உள்ளது. எந்த வகையான புற்றுநோய், எவ்வளவு பரவி உள்ளது, நோயாளியின் பொறுத்துக்கொள்ளும்தன்மை இவற்றைப் பொறுத்து வலி யின் அளவு மாறுபடும். வலியைக் கட்டுப்படுத்த தகுந்த மருந்துகள் உள்ளன. மருத்துவரின் ஆலோசனைப்படி உட்கொள்ளும்போது வலியில் இருந்து நிவா ரணம் பெறுவதுடன் வலி மருந்துகளுக்கு அடிமையாவதையும் தடுக்கலாம்.

## புற்றுநோயும் மனச்சோர்வும்

25% புற்றுநோயாளிகளை மனச்சோர்வு பாதிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. புற்றுநோய் வந்துவிட்டால் மனச்சோர்வு அடைவது இயல்பு என்று நினைத்து அதைப்பற்றி மருத்துவருடனோ நெருங்கிய உறவினர்களுடனோ சொல்லாமல் விட்டுவிடுகின்றனர். புற்றுநோய் என்று தெரிந்தவுடன் சாவு பற்றிய பயம், குடும்பத்தாரின் எதிர்காலம்பற்றிய கவலை, நோயின் தீவிரம் குறித்து பதட்டம், வாழ்க்கைமுறையில் மாற்றம், வருமானம் மற்றும் வேலை இப்படி பல சிந் தனைகளால் மனச்சோர்வு அடைய நேரிடும். இது இரண்டு வாரங்களுக்கு மேல் நீடித்தால் மருத்துவரிடம் காண்பித்து சிகிச்சை பெறுவது அவசியம். நோயாளி மட்டுமின்றி குடும்பத்தாரும் பதட்டம் மற்றும் மனச்சோர்விற்கு ஆளாகலாம். அவர்களும் மருத்துவரை அணுகிப் பரிசோதனை செய்துகொள்வது அவசியம்.

சிகிச்சைமுறைகள்:

உடலில் கட்டி உள்ள இடம், நோய் பரவியுள்ள நிலை, நோயாளியின் வயது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல்நிலை போன்றவற்றைப் பொறுத்து சிகிச்சை வேறுபடுகிறது.

மருத்துவர் கீழ்சொன்னவற்றில் ஏதாவது ஒரு முறையில் அல்லது ஏதேனும் இரண்டு முறைகளைக் கலந்து சிகிச்சை அளிப்பார். நோயைக் குணப்படுத்தி வாழ்நாளை அதிகரிக்கவும், வாழ்க்கைத்தரத்தை *(quality of life)* மேம்படுத்தவும் சிகிச்சை மிகவும் அவசியம்.

**அறுவைச் சிகிச்சை:** இது கட்டியை அகற்றுவதற்காகச் செய்யப்படுவது.

**கதிரியக்கச் சிகிச்சை: (Radiotherapy):** இந்த சிகிச்சை முறையில் சக்தி வாய்ந்த கதிர் மூலம் புற்றுநோய் உயிரணுக்கள் கொல்லப்படுகின்றன.

**கீமோதெரபி (chemotherapy):** மருந்துகள் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

**நாளமில்லாச் சுரப்பிகள் சிகிச்சை:** புற்றுநோய் உயிரணுக்கள் நாளமில்லாச் சுரப்பிகளைக்கொண்டு வளர்வது தடுக்கப்படுகிறது.

**யோகா எவ்வாறு உதவுகிறது?**

சிகிச்சை எடுத்துக் கொள்ளும்போது யோகப் பயிற்சிகள் பெருமளவில் மனச்சோர்வு, வாழ்க்கைத்தரம் பாதிக்கப்படுதல் போன்ற நோயின் பக்க விளைவுகளைக் குறைக்கின்றன.

யோகப் பயிற்சிகள் உடலில் உள்ள அனைத்து உறுப்புகளுக்கும் குறிப்பாக நுரையீரல், சிறுநீரகங்களுக்கு சீரான ரத்த ஓட்டம் மற்றும் ஆக்ஸிஜன் கிடைக்கச் செய்வதால், கழிவுப் பொருட்கள் எளிதாக வெளியேற்றப்படுகின்றன.

அண்மையில் புற்றுநோய்க்கான முக்கிய வாய்ப்புகளில் ஒன்றாக உடற் பருமன் கண்டறியப்பட்டுள்ளது. யோகப் பயிற்சிகள் உடல் பருமனைத் தடுக் கிறது.

யோகப் பயிற்சிகளால் தூக்கம் சீராகிறது. தூக்க மாத்திரையின் துணை யில்லாமல் எளிதில் அதிக நேரம் தூங்க முடிகிறது. உடல் எளிதில் சோர்வ டைவதைத் தடுக்க முடிகிறது. யோகப் பயிற்சிகள் மட்டுமின்றி நடத்தல், நீச்சலடித்தல், விளையாடுதல் போன்றவையும் உதவியாக இருக்கும்.

நோயாளிகள் மட்டுமின்றி அவர்களின் குடும்பத்தாரும் யோகப் பயிற்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளலாம். இதனால் மனதளவில் ஏற்படும் பாதிப்புகள் குறைந்து தளர்வு நிலையில் இருக்க முடிகிறது.

**புற்றுநோய் பற்றி சத்குரு ஜக்கி வாசுதேவ்...**

**சத்குரு ஜக்கி வாசுதேவ்:**

நம் நாட்டில் சாதாரணமாகக் கிடைக்கும் வேப்பிலையும், மஞ்சளும் நம் உடலில் உள்ள புற்றுநோய் அணுக்களைக் கட்டுக்குள் வைத்திருக்கும் என்று நீண்ட காலமாகவே நம்பப்பட்டு வருகிறது. ஏற்கெனவே நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இவை அவ்வளவு பலன் தராது என்றாலும் அரைத்த மஞ்சள் உருண்டை ஒன்றும் அரைத்த வேப்பிலை உருண்டை ஒன்றும் (கோலிக்குண்டு அளவில்) தினசரி சாப்பிட்டு வரும்போது புற்றுநோய் அணுக்கள் கட்டுக்குள் வைக்கப்படுகின்றன. மஞ்சள், வேப்பிலையுடன் யோகப் பயிற்சிகளும் தொடர்ந்து செய்துவரும்போது, உடலின் அனைத்துப் பகுதிகளுமே உறுதி பெறுவதால், புற்றுநோய் அணுக்கள், கட்டியாக மாறி நோயாக வெளிப்படும் வாய்ப்பு இல்லாமலே போகிறது.

உங்கள் உடலில் உள்ள ஒவ்வோர் உயிரணுவும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்படித்தான் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் புற்றுநோ யால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகமாகி வருகிறது. ஏனென்றால், சுற்றுச்சூழல் கேடு, ரசாயனப் பாதிப்புகள், உட்கொள்ளும் உணவு போன்ற பல விஷயங்கள் காரணமாக இருந்தாலும் முக்கியக் காரணம், மகிழ்ச்சியற்ற மனிதர்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதுதான்.

மனிதர்களின் மகிழ்ச்சி தொலைந்து போகும்போது அவர்களின் உடலும் மகிழ்ச்சியற்றுப் போகிறது. எனவே, ஏதோ காரணங்களால் அவர்கள் உடலில் உள்ள சில உயிரணுக்களும் மகிழ்ச்சியை இழக்கின்றன. அப்போது அவர்களின் உயிரணுக்களே அவர்களுக்கு எதிராக வேலை செய்ய ஆரம்பிக்கிறது.

ஆனால் இந்த உடல் ஏன் தனக்கு எதிராகவே வேலை செய்ய வேண்டும்? நீங்களே உங்களுக்கு எதிராக எப்போதும் வேலை செய்வதை, இந்த உடல் உங்களுடன் வைத்துள்ள அனுபவத்தைக் கொண்டு கவனிக்கிறது. எனவே அதுவும் அதே பாணியைப் பின்பற்றி தனக்கு எதிராகவே வேலை செய்கிறது. உயிரணுக்களின் இந்தச் செயலைத்தான் நீங்கள் புற்றுநோய் என்கிறீர்கள். எனவே அதற்குப் புத்துயிர் ஊட்டுவது அவசியமாகிறது. நமது யோக வகுப்புகள் இதைத்தான் செய்கின்றன. ஈஷா யோகாவில் கற்றுத்தரப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்பவி பயிற்சி இப்பணியைத் திறம்படச் செய்கிறது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஏழு நாட்கள் ஈஷா யோகா வகுப்பில் பங்கேற்கும்போது ஏழு நாட்கள் வகுப்பின் முடிவிலேயே உடல்நலம் முன்னேற்றத்தை அவர்களால் தெளிவாக உணர முடிகிறது. சில மாதங்கள் பயிற்சிகளுக்குப் பிறகு உடலளவிலும் மனதளவிலும் மிகுந்த ஆரோக்கியத்தை உணர்கிறார்கள்.

நோயிலிருந்து குணம் பெற முடியாமல் இறக்க நேரிடுவோம் என்று தெரிந்துவிட்டால்கூட இறப்பை சஞ்சலமில்லாமல் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்துக்கு வந்துவிடுகிறார். ஏனெனில், யோகா என்பது வெறும் பயிற்சி மட்டுமல்ல, உங்களையும் வாழ்க்கையையும் முழுமையாகப் புரிந்துகொள்ளவும் உங்களுக்கு உதவுகிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பில் கேட்ஸ்

பில் கேட்ஸ் *(William Henry Bill Gates III)* என்றால் இன்றைய உலகில் தெரியாதவர்கள் இருக்கமுடியாது. இந்த நிமிடம் தொடங்கி ஒவ்வொரு நிமிடமும் உங்களுக்கு 2600 அமெரிக்க டாலரைத் தரப்போகிறது ஒரு தேவதை என்று வைத்துக் கொள்வோம். ஓய்வில்லாமல் 24 மணி நேரமும் ஒவ்வொரு நிமிடமும் அந்த தேவதை உங்களுக்கு 2600 அமெரிக்க டாலரைத் தருகிறது அதுவும் ஒரு நாளுக்கு அல்ல, ஒரு ஆண்டுக்கு அல்ல, 21 ஆண்டுகளுக்கு அப்போது உங்களிடம் எவ்வளவு பணம் சேர்ந்திருக்கும்?

கொடுக்கும் தேவதைக்கே தெரியாமல் போனாலும் ஆச்சரியமில்லை எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால் நிமிடத்திற்கு 2600 அமெரிக்க டாலர் என்ற விகிதத்தில் 21 ஆண்டுகள் எவ்வளவு நிதி சேருமோ அவ்வுளவு நிதிக்கும் இப்போதே சொந்தக்காரராக இருக்கும் ஒருவரை அறிமுகம் செய்து வைக்கத்தான்... ஆம் உலகின் ஆகப் பெரிய பணக்காரர் என்ற பெருமையை தொடர்ந்து 11 ஆண்டுகளாக பெற்று வந்த அவர்தான் 'கணினி உலகம்' என்ற வானத்தை வசப்படுத்திய ஃபில்கேட்ஸ்...

### *Bill Gates* (பில் கேட்ஸ்)

கடந்த இரண்டு தலைமுறைகளில் பில் கேட்ஸ் அளவிற்கு உலக மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய எவரும் இருக்க முடியாது. உலகின் போக்கையே மாற்றியமைத்துவிட்ட சாதனையாளர். மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் தலமைக் கணனி மென்பொருளாளரும், அதன் தலமை நிறை வேற்று அதிகாரியும் ஆன "பில் கேட்ஸ்" தொடர்ந்து பல வருடங்களாக உலக பணக்காரர்கள் வரிசையில் முதலிடத்திலேயே இருந்து வருகிறார்.

1999 களிலேயே இவரது சொத்தின் மதிப்பு 100 பில்லியன்கள் ஆகும். இன்று இவரது மைக்ரோசொப்ட் நிறுவனத்தில் உலகெங்குமாக 78,000 பேர்கள், 105 நாடுகளில் சேவை புரிகின்றனர். உலகில் தற்போது உயிருடன் இருப்போரில் மைக்ரசொஃப்ட் நிறுவனரும், பெரும் கொடையாளியுமான பில் கேட்ஸ் தான் அனேகமானோரால் விரும்பப்படும் மனிதர் என்று சர்வதேச ஆய்வொன்று கூறுகிறது. சிறுவயதில் இருந்து கணினி மென்பொருள் துறையில் சுய விடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியினால் முன்னேறி வெற்றி வாகை சூடி உலகக் கோடீஸ்வரர் எனப் பெயர்பெற்ற மைக்ரோசொப்ட் அதிபர் பில்கேட்ஸ் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.

1955ஆம் ஆண்டு அக்டோபர் 28-ஆம் நாள் அமெரிக்காவில் சியாடில் (Seattle) என்ற ஓர் அழகிய அற்புதமான இயற்கை எழில் கொஞ்சும் நகரில் பிறந்தார் வில்லியம் ஹென்றி கேட்ஸ் அவருக்கு 2 சகோதரிகள், தந்தை "வில்லியம் கெச் கேட்ஸ்" ஒரு சிறந்த வழக்கறிஞர். தாயார் "மேரி மேக்ஸ்வெல்" வாசிங்டன் (Washington) பல்கலைக்கழகத்தின் பள்ளி ஆசிரியை.

இவர்களின் மகனான பில் கேட்ஸ் சிறு வயதிலேயே கணிதம், அறிவியல் பாடங்களில் சிறந்து விளங்கியுள்ளார். ஆரம்பத்தில் மிகவும் கூச்ச சுபாவம் உடைய பில்கேட்ஸ் தனிமையை அதிகம் விரும்புவார். எப்போதுமே ஏதா வது ஒரு சிந்தனையில் ஈடுபட்டிருப்பார். சக வயது மாணவர்கள் விரைவுக் கார்களையும், திரைப்படங்களையும் பற்றி எண்ணிக்கொண்டிருக்க பில்கேட்ஸ் மட்டும் எண்களைப் பற்றியும், அவற்றின் மந்திரம் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருப்பார். வாழ்க்கையில் வெற்றிப்பெற வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு சிறு வயதிலேயே துளிர்விடத் துவங்கியது.

பில் கேட்ஸ் தனது பதிமூன்றாவது வயதில் சியாடில் பகுதியில் சிறந்த பாடசாலையான லேக்சைட் பாடசாலைக்கு மாற்றம் பெற்றார். அங்கு கல்வி கற்கும் காலங்களில் இவரது கணனி ஆர்வமும் திறைமையும் ஆசிரியர்களால் இனங்காணப்பட்டது. சிறு வயது முதலே மென்பொருள் எழுதுவதில் ஆர் வமுள்ளவரானார். பாடசாலையில் முதலாவது மாணவனாக பில் கேட்ஸ் திகழ்ந்ததால் இவர் ஆசிரியர்களின் செல்ல மாணவனாக திகழ்ந்தார்.

அக்காலத்தில் அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் கூடக் கணினி ஓர் ஆடம்பரப் பொருளாக, அனைவருக்கும் எட்டாத ஒரு கருவியாக இருந்தது. லேக்சைட் பள்ளியில் ஒரு கணினி (உண்மையில் அது ஒரு டெலிப்ரிண்டர் வகையை சேர்ந்தது ஆகும்) மற்றும் தினசரி சில மணி நேர கணினி (இது General Electric நிறுவனத்தின் கணினி ஆகும்) பயன்பாட்டுக்காக வாங்கப் பட்டது. மாணவர்களுக்கு கணினி பயன்று கொள்ள வசதியாக இருக்கும் என்பதே இதன் நோக்கம் ஆகும். கேட்ஸ் இதை நன்றாகப் பயன்படுத்தி கொண்டார்.

பில் கேட்ஸ் தனது முதல் கணினி நிரலை டிக்-டக்-டே விளையாட்டுக்காக எழுதினார், அது பயனாளர்களை கணினிக்கு எதிராக விளையாட வழி வகுத் தது. இவரது ஆர்வத்தை பார்த்து பள்ளி இவருக்கு கணித வகுப்பில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலக்கு அளித்தது. அதன் மூலம் இவரால் அதிக நேரம் கணினி பயிற்சியில் ஈடுபட முடிந்தது. ஆனால், கேட்ஸ் மற்றும் இதர மாணவர்கள் கணினியின் இயங்கு தளத்தில் *(Operating System)* உள்ள ஒட்டைகளை பயன்படுத்தி அதிக கணினி நேரத்தை உபயோகித்தாக குறை கூறி தினசரி சில மணி நேர கணினி பயன்பாட்டுத் திட்டம் பயன்படுத்த தடை செய்யப்பட்டது.

அப்போது கணினியை பயன்படுத்திக் கொண்டவர்களில் முக்கியமானவர்கள் பில் கேட்ஸும், அவன் நண்பன் பால் ஆலனும்*(Paul Allen)* ஆவர். இவர்களில் பில்கேட்ஸ் எட்டாம் வகுப்பு மாணவனாகவும் பால் ஆலன் பத்தாம் வகுப்பு மாணவன் ஆகவும் இருந்தனர். ஆனால் கணினிக் கல்வியைக் கற்பதில் இருவருக்கும் தணியாத ஆர்வம், தீராத தாகம். அனால் அவர்களின் பாடசாலையில் திறமையான கணினி ஆசிரியர் கூட அப்போது இருக்கவில்லை. இருப்பினும் இரு நண்பர்களும் ஆசிரியர்களே வியக்கும் வகையில் தங்களின் கணினி அறிவை வளர்த்துக் கொண்டார்கள். கணினித் தொழிற்பாடு பற்றிய நூல்களை எல்லாம் ஆர்வமாக தேடித் படித்தார்கள்.

ப்ரோக்ராம்மிங் *(Programming)* மொழியில் இவர்களுக்கு தனி வெறியே ஏற்பட்டுவிட்டது எனலாம். இதனால் இவர்களுக்கு இரவு, பகல் என்று கிடையாது. பாடசாலை நேரம், விடுமுறை என்று கிடையாது. கடும் பயிற்சியில் இருவரும் ஈடுபட்டனர். நடைமுறை வாழ்க்கைக்கு பயன்படும் வகையில் ப்ரோக்ராம்மிங் மொழிகளை உருவாக்க பில் ஆர்வம் கொண்டான். சுருக்கச் சொன்னால் கணினியால் இருவரும் புகுந்து விளையாடிப் புதுமைகள் காண விரும்பினர்.

ஆனால் அக்கால கட்டத்தில் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் நிதி நெருக்கடி காரணமாக பிள்ளைகளின் பெற்றோர்களிடம் நிதி அறவிட்டு செயற்பட வேண்டிய நிலை ஏற்பட்ட பொழுது மட்டுப்படுத்தப்பட்ட நேரம் வழங்கப்பட்டது. அது பில்லுக்கு போதுமானதாக காணப் படவில்லை.

பாடசாலையில் கணினிக்கல்விக்கு ஆபத்து நேரிட்ட போதும் பில்லும், பாலுவும் பல்கலைக்கழக இளைஞர்களின் ஸி.ஸி.ஸி நிறுவனத்துடன் இணைந்து கொண்டார்கள். இவர்கள் அவர்களைவிடச் சிறியவர்களாக காணப்பட்டமையால் இவர்களின் திறமையில் நம்பிக்கை ஏற்படவில்லை. ஆனாலும் பில்லுக்கும், பாலுக்கும் மீண்டும் நீண்ட நேரம் கணினியுடன் உறவாட வாய்ப்புக் கிடைத்தது.

பாடசாலைக் கல்வியை முடித்த பிறகு மேல் படிப்பை தொடர்ந்து அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்போல் வக்கீலாகி விட வேண்டும் என்று குடும்பத்தினரும் உறவினர்க ளும் வற்புறுத்தினர். ஆனால் பில்லின் ஆழ்மனதில் விதைக்கப்பட்ட கணினிக் கனவுகள், கணினி ப்ரோக்ராம்மிங்கை சுற்றி சுற்றி வந்தன.

பில்லும், பாலும் அங்கு உள்ளவர்களை விடத் திறமையாக நேரகாலம் பாராது வேலை செய்த போதும் அவர்களுக்கு மாணவர்களுக்குரிய கொடுப் பனவே வழங்கப்பட்டது. ஆனாலும் அவர்கள் பணத்திற்காக அங்கு வேலை செய்யவில்லை. கணினியுடன் வேலை செய்யும் வாய்ப்புக்காக பணியை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். இதில் வெற்றி கண்டனர்.

இதன் பின்னர் பாடசாலை இறுதித் தேர்விலும் சிறப்பாக வெற்றி பெற்றார் பில். ஆனால் பாலு பாடசாலைக் கல்விக்கு முழுக்குப் போட்டுவிட்டான். மேலும் பில் பெற்றோர்களின் விப்பத்திற்கு இணங்க வக்கீல் கல்வியை அவ ரால் தொடர முடியாத நிலையில் இடைநிறுத்தினார்.

அதன் பின்னர் பில்லும் பாலும் ஒரு கணினி நிறுவனத்தை ஆரம்பிப்பது பற்றி கனவு காண்பார்கள். திட்டம் தீட்டுவார்கள். விவாதிப்பார்கள்.ஆனால் நிதி நெருக்கடியினால் அவர்கள் திட்டத்தை தள்ளிப் போட்டு விட்டார்கள்.

அவர்களிடம் ஆசை, ஆற்றல், அறிவு, அனுபவமும் இருந்தது ஆனால் காலம் மட்டும் கனியவில்லை. *1974* ம் ஆண்டு இன்டெல் *(intel)* நிறுவனம் புதிய *Micro Processor* யை அறிமுகம் செய்தது. அதன் ப்ரோக்ராம்மிங் பணிக்கு அந்நிறுவனம் பில், பால் இடமும் உதவியை நாடியது. இச்சந்தர்ப்பத்தைச் சரியாக பயன்படுத்தி வெற்றி காண வேண்டும் என்ற ஆர்வத்துடன் *COBOL, FORTRON, PASCAL* போன்ற மொழிகளில் தேர்ச்சி பெற்ற அவர்கள் *BASIC* முறையில் ப்ரோக்ராம்மிங் எழுத ஆரம்பித்தனர்.

அனால் இப்பணியை "விரைவாக, பிழையின்றி, மற்றவர்களை முந்திக் கொண்டு, சரியாக முடிக்க வேண்டும்", என்று எண்ணினார்கள். அல்லா விட்டால் தமது இரவு பகல் பாராது உழைத்த கடினமான உழைப்பு பயனற்றுப் போய்விடும் என்று எண்ணினார்கள்.

இவர்களின் விடாமுயற்சியினால் எழுதப்பட்ட ப்ரோக்ராம்மிங் ஆனது பரிசோதித்துப் பார்க்கப்பட்டது. முயற்சி வெற்றி கண்டது. இதனால் மகிழ்ச்சி யடைந்த பில்லின் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அப்போது பில்லுக்கு இருபது வயது .இந்த வெற்றியின் திருப்புமுனை அவர்களை உலகறியச் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1977 ஆம் ஆண்டு ஆல்புகர்க் நகரின் மிகப் பெரிய அடுக்கு மாடிக் கட்டடத்தின் எட்டாவது மாடியில் ஒரு அறையில் இவர்கள் மைக்ரோசாப்ட் (Microsoft) நிறுவனத்தை ஆரம்பித்தனர். அந்த அறையில் அங்கும் இங்குமாகக் கணினிகள் கிடந்தன. விசைப்பலகைகளில் சில விரல்கள் விளையாடிக் கொண்டிருந்தன. அங்கு சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண் ரைப் பிரைட்டரில் அமர்ந்து கொண்டிருந்தாள்.

திடீரெனபுயல்போலஒருபையன்அந்தஅறைக்குள்நுழைந்துநிர்வாகியின் அறைக்குள் போய்க் கொண்டிருந்தான். ஹலோ..ஹலோ ..யாரது? முதலாளி ஊரில் இல்லை என உரக்க குரல் கொடுத்தார். ஏனெனில் வெளியார் யாரும் அந்த அறைக்குள் நுழையக் கூடாது என்பது உத்தரவு. அவனோ கதிரையில் அமர்ந்து கணினியில் கவனம் செலுத்த ஆரம்பித்தான். அந்தப் பெண் புதிதாக நியமனம் பெற்றவள்.

அவள் வேகமாக தனது அலுவலகரை நோக்கிச் சென்று "சார்" யாரோ ஒரு பையன்......"அவள் முடிக்கவில்லை, அவர் சிரித்தபடி பையனா? அவர் தான் இந்தக் கம்பனியின் முதலாளி பில்கேட்ஸ் என்றார். அந்தப் பெண்ணின் விழிகள் வியப்பில் விரிந்தன. இருபது வயது இந்த சின்ன பெடியன் இக் கம்பனியின் முதலாளியா? நம்பவே முடியவில்லை? ஆனால் உண்மை அதுதான்.

அச்சிறிய கம்பனி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர ஆரம்பித்தது. தனது நிறுவனத்தில் வேலை செய்யும் பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அவர்களின் திறமை மதிப்பிடப்பட்டு திறமைக் கேற்றவாறு ஊக்கிவிப்பு பரிசில்கள், சம்பள உயர்வு, பதவி உயர்வு, போனஸ் என்பன வழங்கப்பட்டு வருகின்றமை சிறப்பம்சமாகும். கடினமாக, தீவிரமாக முழு ஆற்றலையும் வெளிப்படுத்தி வேலை செய்ய முடியாதவர்களை இந்த இடம் உங்களுக்கு ஏற்றதல்ல என்று சொல்லி வெளியே அனுப்பிவிடுவாராம்.

1981-ஆம் ஆண்டில் IBM கணினிகளுக்கான MS-DOS என்ற Operating System அதாவது இயங்குதளத்தைஅறிமுகம்செய்தார்,அதன்சிறப்பைஎடுத்துக்கூறிமற்ற கணினி தயாரிப்பாளர்களையும் MS-DOS இயங்குதளத்தைப் பயன்படுத்துமாறு ஊக்கமூட்டினார் ஃபில்கேட்ஸ்...அது ஏற்றுக்கொள்ளப்பட்டு 80களில் கணினிகள் பெருமளவில் விற்பனையாகத் தொடங்கின விற்பனையாகும் ஒவ்வோரு கணினிக்கும் அதன் இயங்குதளத்திற்கான லைசென்ஸ் கட்டணம் கிடைப்பதால் ஃமைக்ரோசாப்ட்டின் வருமானம் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மாறிவரும் உலகில் மாறாதிருப்பது மாற்றம் ஒன்று மட்டுமே' என்ற சொற்றொடர் கணினி உலகத்திற்குதான் மிகவும் பொருந்தும். அதை உணர்ந்துதான் போட்டியை எதிர்பார்த்துத்தான் ஃமைக்ரோசாப்ட் நிறுவனமும் புதிய புதிய மென்பொருள்களை உருவாக்கிக் கொண்டே இருக்கிறது. *IBM* கணினிகளுக்கு போட்டியாக மவுஸ் கொண்டு இயக்கும் ஆப்பிள் கணினிகள் அறிமுகமானபோது அது மிகவும் பிரபலமடையும் என்று அனைவரும் எதிர்பார்த்தனர், உலகின் மொத்த கவனமும் ஆப்பிள் பக்கம் திரும்பியபோதும் அசரவில்லை பில்கேட்ஸ். அசுர வேகத்தில் ஃமைக்ரோசாப்ட் விண்டோஸ் என்ற இயங்குதளத்தை அறிமுகம் செய்தார் அது இமாலய வெற்றிப் பெற்றது .

பில்கேட்சிடம் உள்ள ஒரு நல்ல அம்சம் தொழிலாளர், நிர்வாகி, முதலாளி என்ற இரும்புத் திரைப் பிரிவு வேறுபாடுகள் இல்லை. எல்லோரும் கலந்து பழகலாம், ஆலோசனை வழங்கலாம். மைக்ரோசொப்ட் நிறுவனத்தில் பணியாற்றிய மெலிண்டா பிரெஞ்ச் என்ற பெண்ணை நேசிக்கத் தொடங்கினார். கண்டதும் காதல் என்று கொள்ளாது, ஐந்து வருடங்களுக்கு மேலாக நெருங்கிப் பழகிய பின்னர் அந்த நட்பு காதலாக மலர்ந்தது. அவள் அழகைவிட அறிவால், உழைப்பால் உயர்ந்தவள். சுறுசுறுப்பானவள், கலகலப்பான இயல்பு உடையவள்.

அது மட்டுமல்லாமல் 90களின் தொடக்கத்தில் பிரபலமாகத் தொடங்கியிருந்தது இணையம். இணையத்தில் உலா வர உதவும் (உலவி) 'நெட்கேப்ஸ்' *(net cafe)* என்ற மென்பொருளைத் தயாரித்து விற்பனை செய்தார் மாக் ஆண்டர்சன் என்பவர். இணையத்தின் எதிர்காலத்தை நன்கு புரிந்து கொண்ட பில் கேட்ஸ் அந்த மென்பொருளை விலைக்கு வாங்க விரும்பினார், ஆனால் அதை விற்கவோ ஃமைக்ரோசாப்ட்டுடன் இணையவோ மாக் ஆண்டர்சன் மறுக்கவே மீண்டும் தன் மந்திரத்தை நிகழ்த்திக் காட்டினார் ஃபில்கேட்ஸ்,

நெட்கேப்ஸ்க்கு இணையான இண்டர்நெட் எக்ஸ்புளோரர் என்ற இணையச் செயலியை உருவாக்கி அதனை புதியக் கணினிகளுடன் இலவசமாக விநியோகம் செய்தார் அதனால் விலைக்கு விற்கப்பட்டு வந்த நெட்கேப்ஸின் இணைய ஆதிக்கம் மங்கத் தொடங்கியது அதுமாதிரியான விற்பனைத் தந்திரம் முறையற்றது என்று ஃமைக்ரோசாப்ட்டின் மீது நீதிமன்றத்தில் பல வழக்குகள் தொடரப்பட்டன. ஆனால் ஃபில்கேட்ஸை அசைக்க முடியவில்லை. என்ன வந்தாலும் பில்கேட்ஸுக்கே வெற்றி கிடைக்கும் ஏனென்றால் பில்கேட்ஸின் போட்டியாளர்கள் குறி வைப்பது பெரிய பெரிய நிறுவனங்களை, ஆனால் பில் கேட்ஸ் குறி வைப்பதோ சாமானியர்களை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில் கேட்ஸ் ஜனவரி 1, 1994 ஆம் வருடம் மெலிண்டாவை திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு ஜெனிபர் காதரின், போஃப் அடேல் என்று இரு மகள்களும், ரோடி ஜான் என்ற ஒரு மகனும் உள்ளனர்.

1999-ஆம் ஆண்டு 'Business at the speed of thought' என்ற நூலை எழுதினார் ஃபில்கேட்ஸ். 25 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு 60 நாடுகளில் விற்பனையாகிறது அந்த நூல், அதற்குமுன் அவர் எழுதிய The road a head என்ற நூலும் அதிகமாக விற்பனையாகிறது. இரண்டு நூல்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் முழுத் தொகையையும் அற நிதிக்கு வழங்கியிருக்கிறார் பில்கேட்ஸ், மெலிண்டா ஃபிரெஞ்சு கேட்ஸ் என்பவரை 1994 ஆம் ஆண்டு மணந்து கொண்டார் பில்கேட்ஸ், அவர்களுக்கு மூன்று குழந்தைகள் பில்கேட்ஸும் மனைவியும் இணைந்து பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையை நிறுவி இதுவரை சுமார் 27 பில்லியன் அமெரிக்க டாலரை சமூக நலப் பணிக்காக வழங்கியிருக்கின்றனர்.

விண்டோஸ் 1.0 வெளியிடப்பட்டு நான்கு ஆண்டுகள் கழித்துதான் விண்டோஸ் 3.0 வெளியிடப்பட்டது. இப்பொழுது விண்டோஸ் 8.1 இயங்கு தளம் வெளியிடப்பட்டு வெற்றிகரமாக இயங்கிக்கொண்டிருக்கிறது. அத்து டன் இவர்கள் வெளியிட்ட விண்டோஸ் எம்.இ(ME) மற்றும் விண்டோஸ் விஸ்டா மட்டுமே தோல்வியுற்றது.

நாமும் வாழ்க்கையில் நம்பிக்கையோடும் விடாமுற்சியோடும் போராடி னால் நமக்கும் அந்த வானம் வசப்படாமலா போகும்!

நல்ல முடிவுகள், அனுபவத்திலிருந்து பிறக்கின்றன;
ஆனால் அனுபவமோதவறான முடிவுகளிலிருந்து கிடைக்கிறது.

பயிற்சியும் முயற்சியும் இருந்தால் ஒவ்வொரு மனிதனும் சாதனையாளனே என்பதற்கு பில் கேட்ஸ் (Bill Gates) ஒரு மிகச்சிறந்த எடுத்துகாட்டு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# *Facebook* நிறுவுனர் மார்க் ஸூக்கர்பெர்க்

இன்றைக்கு உலகம் முழுவதும் கூகுளை விட அதிகம் தெரிந்திருக்கும் ஒரே தளம் எது என்றால் அது பேஸ்புக் மட்டும்தான். பேஸ்புக்கின் அந்த பேஸ்புக் பற்றி உங்களுக்கே தெரியாத சில விஷயங்களை இங்கு பார்ப் போம் ஹார்வேர்டு பல்கலைக்கழக மாணவர்களால் 2004ம் ஆண்டு சும்மா விளையாட்டுப் போக்கில் முதலில் ஆரம்பிக்கப்பட்டது தான் இந்த பேஸ்புக். இது ஆரம்பிக்கப்படும் போது இவ்வளவு உயரம் வளரும் என நிச்சயம் யாரும் எதிர்பார்க்கவில்லை. இன்றைக்கு உலகின் அனைத்து மூலைகளிலும், ஆலவி ருட்சமாக வளர்ந்து, டிஜிட்டல் உலகில் முதல் இடத்தில் இயங்கும் இந்த நிறுவனம், அப்போது ஒரு சிறிய விடுதியின் ஒதுக்குப் புறமான அறையில் தொடங்கப்பட்டது.

இதனை விளம்பரப்படுத்தி, பிரபலமாக்குவதற்காக, அப்போது ஹார் வேர்ட் பல்கலைக் கழகம் மாணவர்களுக்கென நடத்தி வந்த இணையத் தளங்களை மார்க் ஸூக்கர்பெர்க் முடக்கினார் என்று பலர் வதந்திகளைப் பரப்பி மார்க்கின் தளத்தை முடக்க முயற்சி செய்தனர்.

தொடக்கத்தில் *Facemash* என அழைக்கப்பட்ட பேஸ்புக் தளத்தினை, ஹார்வேர்ட் பல்கலைக்கழக நிர்வாகம் மூடியது. காப்புரிமை, பாதுகாப்பு, தனிநபர் சுதந்திரம் ஆகியவற்றில் அந்தத் தளம் தலையிடுவதாக, பல்கலைக் கழக அதிகாரிகள் மார்க் ஸூக்கர்பெர்க் மீது நடவடிக்கை எடுத்தனர். இதன் பின்னரே, ஸக்கர்பெர்க் *"thefacebook."* என்னும் புதிய தளத்தினை அமைத்தார்.

*2004* பிப்ரவரி *4* ஆம் நாள், ஸக்கர்பெர்க் *thefacebook.com* என்னும் தன் தளத் தினை இயக்கத் தொடங்கினார். தொடங்கப்பட்ட *24* மணி நேரத்தில், *1,500* பயனாளர்கள் இதில் இணைந்தனர்.

ஹார்வேர்ட் பல்கலைக்கழக வகுப்பு மாணவர்களில் பாதிப்பேர் இதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்தனர். பின்னர், இந்த் தளத் தினை மற்றப் பள்ளி, மற்றும் கல்லூரி மாணவர்கள் பயன்படுத்த அனுமதிக்கப் பட்டனர்.

தொடக்கத்தில் பேஸ்புக் இணையத் தளத்தில் போட்டோக்கள் அனுமதிக் கப்படவில்லை. அக்டோபர் 2005ல், ஒவ்வொரு பயனாளரும் எவ்வளவு போட்டோக்கள் மற்றும் படங்களை அப்லோட் செய்து பதிவு செய்து கொள் ளலாம் என்று அனுமதி தரப்பட்டது.

இன்று பேஸ்புக் இணையத் தளத்தில் போட்டோக்களே முக்கிய அம்சங் களாக உள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 2013 ஆண்டு வரை, இந்த தளத்தில் பதியப்பட்ட படங்களின் எண்ணிக்கை 27 ஆயிரம் கோடியைத் தாண்டி யதாக அறிவிக்கப்பட்டது. நாள் தோறும் 39 கோடி படங்கள் அப்லோட் செய் யப்படுகின்றன.

கல்லூரிகள், பள்ளிகள் என்ற எல்லை வரையறையைத் தாண்டி, பேஸ் புக் இணையத் தளத்தில் பல பிரிவினரும் இணைய, இந்த தளம் அசுர வேகத்தில் வளரத் தொடங்கியது. 2006, செப்டம்பர் 26ல், பொதுமக்கள் யார் வேண்டுமானாலும் இணைந்து பதிந்து கொள்ளலாம் என்ற அனுமதி வழங் கப்பட்டது.

இதனால், 2006 ஆம் ஆண்டு இறுதியில், பயனாளர் எண்ணிக்கை ஒரு கோடியே 20 லட்சம் என்ற எண்ணிக்கையை எட்டியது. அதற்கு முந்தைய ஆண்டில், இது 55 லட்சமாக மட்டுமே இருந்தது.

2006 செப்டம்பரில், யாஹூ நிறுவனம் நூறு கோடி டாலர் கொடுத்து, பேஸ்புக் இணையத் தளத்தினை வாங்க முன்வந்தது. பேஸ்புக் இணையத் தள நிறுவனத்தில் முதன் முதலில் முதலீடு செய்த பீட்டர் என்பவர், இதனை ஏற்றுக் கொள்ளலாம் என அறிவுறுத்தினார்.

ஆனால், இதற்கென கூட்டப்பட்ட கூட்டத்தில், 22 வயது இளைஞரான மார்க், "இந்த கூட்டம் 10 நிமிடத்தில் முடியப்போகிறது. நாங்கள் எங்கள் இணையதளத்தை விற்கப் போவதில்லை" என அறிவித்தார்.

ஏனென்றால், பணம் சம்பாதிப்பதை தன் இலக்காக என்றைக்குமே ஸக்கர் பெர்க் கொண்டதில்லை. இந்தப் பணத்தை வைத்து நான் என்ன செய்திட முடி யும்? வேண்டுமானால், இன்னொரு சமூகத் தளத்தைத் தொடங்கலாம். அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனையே வளப்படுத்துவேன் என்றார்.

பேஸ்புக் இணையதளத்தின் முதல் 30 மாதங்கள், பயனாளர்களின் தகவல் பக்கங்களைப் பதிந்து இயக்குவதிலேயே இருந்தன. செப்டம்பர் 2006ல், முதல் முதலாக, பேஸ்புக் தளத்தில் செய்திகள் தரப்பட்டன.

உங்கள் சமூக வலைவில் என்ன நடக்கின்றது என்று தகவல்களைத் தருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதனால், தொடர்ந்து ஒரு நிகழ்வு சார்ந்து கிடைக்கும் தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. இதனுடன் பேஸ்புக் மினிபீல்டு(MiniFeed) என்ற வசதியையும் கொடுத்தது. இதில் பய னாளர் ஒருவரின் சமூக செயல்பாடுகள் தொகுக்கப்பட்டன.

2007 ஆம் ஆண்டு மே 24 அன்று, பேஸ்புக் தன்னுடைய பேஸ்புக் ப்ளாட் பார்ம்(Facebook Platform) என்னும் மேடையை மக்களுக்கு வழங்கியது. இது, பேஸ்புக் தளத்தில் இயங்கக் கூடிய புரோகிராம்களை மற்றவர்கள் தயாரித்து வழங்குவதற்கான மேடையாக அமைந்தது.

தர்ட் பார்ட்டி(Third Party) அப்ளிகேஷன்களுக்கு உதவி புரிய பேஸ்புக் மார்க்அப் லேங்குவேஜ்(Facebook Markup Language) என்னும் வசதியையும் இதனோடு அளித்தது. பல முக்கிய அப்ளிகேஷன்கள் பேஸ்புக் தள செயல் பாட்டில் இணைந்தன.

நிறுவனம் தொடங்கி ஐந்தாண்டுகள் கழித்து, பேஸ்புக் நிறுவனம் நல்ல லாபத்துடன் இயங்குவதாக அறிவிக்கப்பட்டது. 2009ல், இந்நிறுவனம் பெற்ற வருமானம் 77.7 கோடி டாலர்.

இது 2008ல் பெற்றதைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாக இருந்தது.


2012 ஆம் ஆண்டு மே மாதம், தன் பொதுப் பங்கு வெளியீட்டினை பேஸ்புக் மேற்கொண்டது. இதன் மூலம் 1,600 கோடி டாலர் திரட்டியது. அமெரிக்க சரித்திரத்தில், இது மூன்றாவது பெரிய பங்கு வெளியீடாக அமைந்தது.

சென்ற 2012 ஆம் ஆண்டு, அக்டோபர் 4ல், பேஸ்புக் இணையத் தளத்தில் ஒரு மாதத்தில் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் வாடிக்கையாளர் எண்ணிக்கை, 100 கோடியைத் தாண்டியதாக, மார்க் ஸூக்கர்பெர்க் அறிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாழ, இந்தப் புவியில் வாழும் ஏழு பேரில் ஒருவர், பேஸ்புக் பயனாளராக உள்ளனர். நூறு கோடிப் பேரை, ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ள வைத்து, நட்பு ரீதியாக இணைப்பது என்பது மிகப் பெரிய பணி என அடக்கத்துடன் மார்க் ஸக்கர்பெர்க் கூறினார். என் வாழ்வில் இதுதான் நான் அதிகம் பெருமைப்படும் விஷயம் என்று கூறினார் மார்க்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடேசன் இராசபூபதி தம்பதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## திரு.கே.நடேசன் அவர்கள்

கம்பளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் கௌரவ பொருளாளர் திரு.சு.அருணகிரிநாதர் அவர்களின் சிறிய தந்தையாரும் தேவஸ்தானத்தின் நிர்வாகசபை உறுப்பினர்களில் ஒருவருமாகிய திரு.கே.நடேசன் அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கம்பளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான தலைவர் உட்பட நிர்வாகசபை அங்கத்தவர்களும் கம்பளை வாழ் இந்து பொது மக்களும்**



அமரர்
குமாரசாமி
சுந்தரமூர்த்தி



அமரர்
கணபதிப்பிள்ளை
பொன்னுத்துரை



அமரர்
கணபதிப்பிள்ளை
சிவசுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கம்பளையில் சொந்த வியாபாரத்தை ஆரம்பித்த போது



கம்பளை முத்துமாரியம்மன் கோயிலில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கம்பளை முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேகத்தின் போது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கிளிநொச்சி பாட்டா கடைத் திறப்புவிழாவின் போது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கம்பளையில் பாட்டா கடையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கம்பளை கதிரேசன் கோயில் சிவராத்திரி விழாவின்போது



கம்பளை மாரியம்மன் கோவிலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

"எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு

## அமரர் குமாரசாமி நடேசன்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எல்லா வழிகளிலும் எம்மை நெறிப்படுத்தி எம்மை விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டதும் நேரிலும், தொலைபேசி வாயிலாகவும், தபால் மூலமாகவும் துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் பத்திரிகை வாயிலாகவும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், உதவி ஒத்தாசை புரிந்த அன்பு உள்ளங்களுக்கும், மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் அன்னாருக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளித்த எமது ஊரைச் சேர்ந்த புற்றுநோய் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ந.ஜெயகுமாரனுக்கும், பல வழிகளாலும் உதவி புரிந்தவர்களுக்கும், அவரது அந்தியேட்டி சபீண்டிகரண நிகழ்ச்சிகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் இம்மலரினை அச்சிட்டுத் தந்த தேவி Printers நிறுவனத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.


**குடும்பத்தினர்**

**விளானை,**

**களபூமி, காரைநகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாக நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதைக் கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய்?
அது வீணாவதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மறுநாள் அது வேறோருவருடையதாகும்
இந்த மாற்றம் உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**



தேவி Printers, Jaffna
021 300 3030

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org